

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 35 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 27 – புதன்கிழமை 13 செப்டம்பர் 2023 – கோவை ★ ★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 35: Thiruvalluvar Year - 2054 - Aavani 27 - Wednesday 13 September 2023 - Kovai ★★12 Pages ₹5.00


## 1 கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் பயன் பெறுகிறார்கள்! செப்.15 அன்று செயல்படுத்தப்படும் மாபெரும் திட்டமான

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திக் காட்ட வேண்டும்!

## அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டுகிற வகையில் மிகுந்த கவனமுடன் செயல்படுமாறு அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, செப். 13 -**

**பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று 1 கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் பயன் பெறும் வகையில் செயல்படுத்தப்பட உள்ள மாபெரும் திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்ட வேண்டும் எனவும், அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டும் வகையில் மிகுந்த கவனமுடன் செயல்படுமாறும் அதிகாரிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிர் பயன் பெறும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்துவது குறித்த ஆய்வுக் கூட்டம் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2023) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.9.2023 அன்று தொடங்கப்படவுள்ளதையொட்டி அதுகுறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் தொடக்க விழாவானது வருகிற 15–ஆம் நாள் காஞ்சிபுரத்தில் நடைபெற இருக்கிறது.

அன்றைய தினமே அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் அமைச்சர்கள் முன்னிலையிலும் நடைபெற இருக்கிறது.

**குடும்பத் தலைவிகளுக்கான மிகப்பெரிய திட்டம்!**

தமிழ்நாடு அரசின் மிகப்பெரிய திட்டம் என்றால் இதுதான். ஒரே நேரத்தில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட பெண்கள் – ஆயிரம் ரூபாயை மாதாமாதம் – ஆண்டு தோறும் பெறப் போகிறார்கள்.

அதிகப்படியான நிதி ஒதுக்கீடு தேவைப்படும் திட்டமாகவும் –

அதிகப்படியான பயனாளிகள் உள்ளடக்கிய திட்டமாகவும் இது அமைந்துள்ளது. இதனை வெற்றிகரமாக நடத்திக் காட்டும் பொறுப்பும் கடமையும் அதிகாரிகளாகிய உங்களுக்கு இருக்கிறது.

ஒரு கோடிக்கும் மேற்பட்டவர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதால் கிடைக்கின்ற பாராட்டு, ஒரு கோடி பாராட்டுகளுக்கு சமம்.

அதேபோல்தான் சிறு தவறு நடந்துவிட்டால் அதனால் கிடைக்கும் கெட்டபெயரும், என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.9.2023) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.9.2023 அன்று தொடங்கப்படவுள்ளதையொட்டி அதுகுறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வளர்ச்சி ஆணையர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

எனவே எந்த இடத்திலும் – எந்தச் சூழலிலும் – எந்த ஒரு தனிநபருக்கும் சிறு தவறு கூட நடந்து விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் தொடர்ந்து சொல்லி வருவதை, தற்போதும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மிகவும் கவனமாக செயல்பட்டு திட்டத்தை சரியாக செயல்படுத்த வேண்டும்!**

தகுதி வாய்ந்த பெண்களுக்கு உரிமைத் தொகை அவர்களது வங்கிக் கணக்கில் வரும் செப்டம்பர் 15 முதல் கிடைக்கும் வகையில் நாம் ஏற்பாடு செய்துள்ளோம். இத்தகைய தகுதி பெற்ற குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் மாதம் தோறும் வங்கிகளில் அவர்களது கணக்கில் உரிமைத் தொகை வரவு வைக்கப்படும்.

ஏ.டி.எம். கார்டுகள் முதற்கட்டமாக குறிப்பிட்ட எண்ணிக்கையிலும், படிப்படியாக விரைவில் அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். ஆனால் ஏ.டி.எம். கார்டு வழங்கப்படுவதற்காக காத்திருக்காமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் உரிமைத் தொகை வழங்கப்படும். பயனாளிகளுக்கு பணத்தை எடுப்பதில் எந்த சிக்கலும் ஏற்படக் கூடாது, அதிலும் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோல், வரும் 15–ஆம் தேதி, என்னுடைய சார்பில் மகளிருக்கு அனுப்பி வைக்கப்படும் குறுஞ்செய்தியில், பணம் எடுப்பது தொடர்பாக ஏதேனும் பிரச்சினை கள் இருந்தால், அதுகுறித்து தகவல் தெரிவிக்க வேண்டிய Toll-Free எண்ணும் சேர்க்கப்பட வேண்டும்.

இந்த திட்டத்தில் இணைந்து கொள்ள 1 கோடியே 63 லட்சம் விண்ணப்பங்கள் அரசுக்கு வந்துள்ளன. தகுதியுள்ளவர்கள் என நாம் தேர்ந்தெடுத்துள்ளது 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேர்.

அப்படியானால் மற்றவர்களது கோரிக்கைகள் ஏன் ஏற்கப்படவில்லை என்பதை நாம் அவர்களுக்குச் சொல்லியாக வேண்டும். எந்த அடிப்படையில் உங்களது கோரிக்கையை எங்களால் ஏற்க முடியவில்லை என்பதற்கான காரணத்தை குறிப்பிட்டு அவர்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பியாக வேண்டும்.

**அரசின் மீது மிகுந்த நம்பிக்கை பொதுமக்களுக்கு ஏற்படும்!**

அப்படி அனுப்பினால் பெரும்பாலானவர்கள் மனநிறைவு அடைவார்கள்.

சிலருக்கு சந்தேகங்கள் இருக்கலாம் – மறுபடியும் நம்மிடம் விண்ணப்பிப்பார்கள். அவர்களுக்கும் அத்தகைய வாய்ப்பை நாம் வழங்க வேண்டும். வாய்ப்பை வழங்கினால் பொதுமக்களுக்கு அரசின் மீது மிகுந்த நம்பிக்கை ஏற்படும்.

வருகிற 15–ஆம் நாள் அன்று மாவட்டத் தலைநகரங்களில் இதற்கான விழா நடக்க இருக்கிறது. பணம் கிடைத்தவர்கள் மகிழ்ச்சியாக வருவார்கள். பணம் கிடைக்காத மகளிர் யாராவது அந்த இடத்துக்கு வந்து கேட்டால், பதில் சொல்வதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

தனியாக இதற்கென அலுவலர்களை உட்கார வைத்து, இப்படி கேட்க வரும் மகளிரிடம் கோரிக்கை மனுக்களை வாங்கி, 'நாங்கள் பரிசீலிக்கிறோம்' என்பதைச் சொல்லி அனுப்பி வைக்க வேண்டும். இது மிகமிக முக்கியமாகும்.

**மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும், இந்த திட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன். அரசுக்கும் வங்கிகளுக்கும் – வங்கிகளுக்கும் பொதுமக்களுக்குமான தொடர்பு சீராக அமைந்து வருகிறதா என்பதை மாதம் தோறும் கண்காணிக்க வேண்டும்.**

**திட்டத்திற்கு தனி கவனம் செலுத்த வேண்டும்!**

இதைச் செய்யாவிட்டால், ஏதாவது ஒரு இடத்தில் பிரச்சினை என்றாலும், அது மாநிலம் முழுவதும் பெரிய செய்தியாக மாறி விடும். அதனால் கவனமாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சியர்கள் அனைவருக்கும், இந்த திட்டத்தை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று தலைமைச் செயலாளர் அறிவுறுத்துமாறும் கேட்டுக் கொள்கிறேன். அரசுக்கும் வங்கிகளுக்கும் – வங்கிகளுக்கும் பொதுமக்களுக்குமான தொடர்பு சீராக அமைந்து வருகிறதா என்பதை மாதம் தோறும் கண்காணிக்க வேண்டும்.

மாதத்தில் முதல் ஒருவார காலம் இந்த திட்டத்துக்காக தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டுக்கு 12 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும் மாபெரும் திட்டம் இது. ஒரு கோடிக்கும் மேற்பட்ட மகளிர் மாதம் தோறும் பயனடையும் திட்டம் இது. எனவே, இத்திட்டம் குறித்து தொடர்ந்து நாம் மக்களிடம் எடுத்துச் சொல்லி வர வேண்டும்.

* மகளிருக்கு கட்டணமில்லா விடியல் பயணம்

* முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

* புதுமைப் பெண் திட்டம் மூலம் மாணவியருக்கு 1000 ரூபாய்

* இளைஞர்களுக்கு நான் முதல்வன் திட்டம்

* மகளிருக்கு மாதம் தோறும் 1000 ரூபாய் கலைஞர் உரிமைத் திட்டம் – ஆகிய 5 திட்டங்களைப் பற்றியும் திரும்பத் திரும்ப மக்களிடம் எடுத்துச் சென்று கொண்டே இருக்க வேண்டும்.

**மக்கள் பாராட்டைப் பெறுகிற திட்டமாக அமைய வேண்டும்!**

எந்த ஒரு திட்டமாக இருந்தாலும், அதனை முறையாகச் செயல்படுத்தினாலே, அதனால் பயனடைந்தவர்கள் மிகப்பெரிய அளவுக்கு நம்மைப் பாராட்டி பேசுவார்கள்.

அத்தகைய பாராட்டுகளை மட்டுமே பெற்றுத்தரும் திட்டமாக கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தை செயல்படுத்திக் காட்ட வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வளர்ச்சி ஆணையர் நா.முருகானந்தம், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த.உதயச்சந்திரன், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட சிறப்புப் பணி அலுவலர் க.இளம்பகவத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

### 66வது நினைவு நாளையொட்டி

# பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனார் நினைவிடத்தில் மரியாதை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலர்வளையம் வைத்து அஞ்சலி!

**பரமக்குடி, செப். 13-**

**இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனாரின் 66 வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழக இளைஞரணி செயலாளர் - விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.**

இந்நிகழ்வில், அமைச்சர்கள் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், தங்கம் தென்னரசு, மூர்த்தி, பெரியகருப்பன், கயல்விழி செல்வராஜ், இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஏ.என். இன்பாரகு, மாநில மகளிர் அணி துணைத் தலைவர் எம்.எஸ். கே. பவானி ராஜேந்திரன், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ்.சுந்தர்ராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப.த.திவாகரன், நகர் மன்ற. இராமநாதபுரம், பரமக்குடி தலைவர்கள் ஆர்.கே.கார்மேகம், சேது கருணாநிதி, துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், ஒன்றிய செயலாளர்கள் கமுதி வி. வாசுதேவன், பரமக்குடி ஜெயக்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ராஜா, துணை அமைப்பாளர்கள், குமரகுரு, சன் சம்பத்குமார் உள்ளிட்ட திரளான கழகத்தினர் பங்கேற்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!**

அதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், இமானுவேல் சேகரனின் குடும்பத்தார் மற்றும் பொது மக்கள், கொடுத்த கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ரூ.3 கோடி மதிப்பில் முழு உருவ வெண்கலச் சிலையுடன் கூடிய மணி மண்டபம் கட்டுவதற்கு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றார். இந்த அறிவிப்பிற்கு அவரது மகள் சுந்தரி பிரபா ராணி மற்றும் குடும்பத்தார்களும் சமூகத்தினரும் நன்றி தெரிவித்துள்ளார்கள்.

மேலும் சமூக நீதிக்காக போராடிய அவரை போற்றும் வகையில் அனைவரும் சமூகநீதிக்காக போராட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, கிளைக் கழக பொறுப்பாளர்கள், தொண்டர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

### ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காகப் போராடிய

# தியாகி இமானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, செப். 13-**

தியாகி இம்மானுவேலுக்கு மணி மண்டபம் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. இந்நிலையில் தேவேந்திர குல வேளாளர் கல்வியாளர் குழு, தேவேந்திரர் பண்பாட்டுக் கழகம், இமானுவேல் சேகரனாரின் மகள் திருமதி. சூரிய சுந்தரி பிரபா ராணி மற்றும் அன்னாரது பேரன் சக்கரவர்த்தி ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து இக்கோரிக்கையினை வலியுறுத்தினர்.

தியாகி இமானுவேல் சேகரனார் அவர்கள் 1924ஆம் ஆண்டு அக்டோபர் 9 அன்று பிறந்தார். இவரது சொந்த ஊர் முதுகுளத்தூர் வட்டம், செல்லூர் கிராமம் ஆகும். இவர் 1942இல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் சென்றார். மேலும் ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்காகவும் போராடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில், தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் சமூக பங்களிப்பினைப் போற்றும் வகையில் அவரது பிறந்தநாள் நூற்றாண்டினை யொட்டி அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் சுமார் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் தமிழ்நாடு அரசின் சார்பில் கட்டப்படும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

**சமூகப் பங்களிப்பை போற்றுகிறேன்!**

தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காகப் போராடிய தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு நாளில், அவரது போராட்ட வாழ்வையும் சமூகப் பங்களிப்பையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன்.**

**பொதுமக்கள் மற்றும் தியாகி இமானுவேல் சேகரனாரின் வழித்தோன்றல்களின் கோரிக்கையின்படி, அன்னாரின் நூற்றாண்டை யொட்டி, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபம் அமைக்கப்படும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின், தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 13-09-2023

# குலத்தொழிலை ஊக்குவிக்கும் ஒன்றிய அரசு!

**சனாதனம் என்றால் என்ன என்று பரப்புரை செய்ய ஒன்றிய அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார் பிரதமர் மோடி. அவர் அறிவித்துள்ள 'விஸ்வ கர்மா யோஜனா' திட்டத்தின் உள்ளடக்கமே சனாதனம்தான். தந்தை தொழிலை மகன் தொடர வேண்டும் என்பதே சனாதனம். குலத் தொழிலை எவரும் மாற்றிக் கொள்ளக் கூடாது என்பதுதான் சனாதனம். அதற்காகவே ஒரு திட்டம் போடுகிறார் பிரதமர்.**

ஆகஸ்ட் 15 அன்று கொடியேற்றிவிட்டு பிரதமர் பேசும் போது குலத்தொழிலைச் செய்பவர்கள் தங்களது குடும்பத் தொழிலைத் தொடர்ந்து செய்தால் நிதி கொடுப்போம் என்று அறிவித்தார். இராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்தின் மறுபதிப்புதான் இது.

விஸ்வகர்மா யோஜனா - என்ற திட்டம் 18 வகையான ஜாதிகளை அடையாளம் காட்டுகிறது. அவர்களது பரம்பரைத் தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலமாக குலத் தொழிலை ஊக்குவிக்கிறது. பரம்பரையாக தொழில் செய்பவர்களுக்கு கடனுதவி வழங்கும் திட்டம் இது.

**பரம்பரைத் தொழில்களைச் செய்பவர்கள் என்றால் அனைத்துத் தொழில்களையும் சொல்லாமல் 18 தொழில்கள் மட்டும் என வரையறுத்தது ஏன்?**

இந்தத் திட்டத்தில் சேர்பவர்கள் பரம்பரை பரம்பரையாக அந்தத் தொழிலை செய்பவர்களாக இருக்க வேண்டும். செருப்பு தைப்பவர் பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலை செய்து வருகிறேன் என சான்றிதழ் வாங்கி வர வேண்டும். இந்தத் தொழிலாளி ஒருவர் தனது தொழிலை விரிவுப்படுத்தி, வேறு ஒரு பொருளை தயாரித்தால் அவருக்கு நிதி உதவி கிடையாது. பி.எம்.விஸ்வகர்மா என்ற திட்டத்தை 16.8.2023 அன்று அமைச்சரவையின் பொருளாதாரக் குழு ஏற்று 13 ஆயிரம் கோடி பணத்தையும் ஒதுக்கி இருக்கிறது. 2023 முதல் 2028 முதல் குலத் தொழில் செய்ய வாரிசுகளுக்கு அவர்களது குடும்பத்தினர் கற்றுக் கொடுப்பார்களாம்.

பதினெட்டு பரம்பரைத் தொழில்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளது.

**1. தச்சர், 2. படகு தயாரிப்பாளர், 3. கவசம் தயாரிப்பவர்**

**4. கொல்லர், 5. சுத்தியல் மற்றும் கருவிகள் தயாரிப்பவர்**

**6. பூட்டு தயாரிப்பவர், 7. பொற்கொல்லர், 8. குயவர்**

**9. சிற்பி, 10.காலணி தயாரிப்பவர், 11. கொத்தனார்**

**12. கூடை, பாய், துடைப்பம் தயாரிப்பவர்**

**13. பொம்மை தயாரிப்பவர், 14. முடி திருத்துபவர்**

**15. பூமாலை தொடுப்பவர், 16. சலவைத் தொழிலாளர்**

**17. தையலர், 18. மீன்பிடி வலை தயாரிப்பவர்**

இதனை செய்யப் பழகுவோருக்கு ஒரு லட்சம் முதல் 2 லட்சம் வரை மானியத்தில் கடன் கிடைக்கும்.

தச்சன் மகன் தச்சுத் தொழிலைத்தான் செய்ய வேண்டும் - சலவைத் தொழிலாளி மகன் சலவைத் தொழிலைத்தான் செய்ய வேண்டும் - முடிதிருத்தும் தொழிலாளி மகன் வாழ்க்கை முழுக்க முடிவெட்டத்தான் வேண்டும் - என்பதை ஊக்குவிக்கிறார் பிரதமர். அதற்குத்தான் இந்தத் திட்டம். அவரவர்க்கு விதிக்கப்பட்ட தொழிலை மட்டுமே அவரவர் செய்ய வேண்டும் என்பதுதான் மனுவின் கட்டளை. அதுதான் சனாதன தர்மம். அதை மீறக் கூடாது என்பதற்காகவே இப்படி ஒரு திட்டத்தை கொண்டு வருகிறார் பிரதமர்.

அனைத்துக் கட்சிகளையும் கூட்டி ஆலோசனைக் கூட்டம் நடத்தி இதனைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினார் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள். இக்கூட்டத்தின் முடிவுப்படி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சென்னையில் நடந்துள்ளது.

குலத் தொழில் கூடாது. ஏழை எளிய - பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடி மக்களும் உயர்ந்த பொறுப்புகளுக்கு வர வேண்டும் என்று திராவிட இயக்கம் போராடியது. திராவிட மாடல் ஆட்சி திட்டங்கள் தீட்டி வருகிறது. ஆனால் குலத் தொழில் செய், உனக்கு மானியம் தருகிறேன் என்கிறார் பிரதமர்.

இவர்களது அனைத்து தர்மங்களும் பிறப்பை அடிப்படையாகக் கொண்டவைதான். இந்தத் திட்டமும் பிறப்பை அடிப்படையாகக் கொண்டதுதான்.

இராஜாஜி குலக்கல்வி திட்டத்தை கொண்டு வந்தபோது தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள்: **"நாம் மேன்மையடையக் கூடாது என்பதற்காகவே இராஜாஜி இந்த திட்டத்தைக் கொண்டு வருகிறார். நம்மை உத்தியோகத்துக்கு லாயக்கு ஆக்கக் கூடாது என்பதற்காக கொண்டு வந்த திட்டம் இது"** என்று சொன்னார் பெரியார்.

**"ஆயிரக்கணக்கான வருடங்களாக கூலிக்காரன் மகன் கூலிக்காரன், மேளம் அடிக்கிறவன் மகன் மேளம் அடிப்பவன், உழுபவன் மகன் உழுபவன் என்றே வைத்துவிட்டார்கள். வெள்ளைக்காரன் வந்துதான் 200 ஆண்டுக்கு முன் இதனை மாற்றினான். இதெல்லாம் தலையெழுத்து என்று நினைக்க வைத்துவிட்டார்கள். இந்தத் தலையெழுத்தை மாற்ற கவலைப்பட்டது நமது இயக்கம் மட்டும்தான். வண்ணார் மகனும், நாவிதன் மகனும் படித்துவிட்டால் உயர்ஜாதிக்காரனுக்கு மரியாதை போய்விடும். அதனால்தான் குலத் தொழிலையே செய்தால் போதும் என்கிறார்கள்"** என்பதை தெளிவுபடுத்தினார் பெரியார்.

சாதியை தொழிலாகவும் - தொழிலாளிகளை சாதி ரீதியாகவும் பிரித்ததைப் பற்றி அண்ணல் அம்பேத்கர் விரிவாக எழுதி இருக்கிறார். **'உன் தொழிலில் லாபமில்லை என்றால் அது உன் கர்மா என்றும், லாபமில்லாத தொழிலை விட்டு இன்னொரு தொழிலைச் செய்யத் தடை செய்வதும்தான் இதில் உள்ள கொடூரம்'** என்பதையும் அண்ணல் அம்பேத்கர் சொல்லி இருக்கிறார். **'தொழிலைக் கற்றுத் தருகிறோம் என்பதற்குள்ளாக சாதியைக் கெட்டிப்படுத்தும் தந்திரம் இருக்கிறது'** என்பதையும் அண்ணல் சொன்னார்.

இந்தக் காலத்தில் சமூகநீதி - இடஒதுக்கீடு - நவீன மயம் - விழிப்புணர்வு ஆகியவற்றால் பலரும் ஜாதி அடையாளம் கொண்ட தொழிலில் இருந்து வெளியேறுகிறார்கள். இதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தடுக்கவே இத்தகைய திட்டங்களைக் கொண்டு வருகிறார் பிரதமர் மோடி. சனாதனக் காப்புத் திட்டங்களைக் கொண்டு வரும் மோடி தான், 'சனாதனத்தை' விளக்கி பிரச்சாரம் செய்யச் சொல்கிறார்.

இதனை ஏன் ஒன்றிய அமைச்சரவையில் சொல்கிறார். சனாதனம் பா.ஜ.க. ஆட்சியின் கொள்கை - அதனால் சொல்கிறார். **சனாதனத்தை எதிர்த்த முதலமைச்சரின் அறிக்கையை தமிழ்நாடு அரசின் செய்தித்துறை வெளியிட்டதாம்? உடனே 'தினமலர்' திகில் ஆகிறது. சனாதனத்தை ஆதரித்து அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் பேசலாம் என்றால், ஒன்றிய அமைச்சர்கள் பிரச்சாரம் செய்யலாம் என்றால் முதலமைச்சரின் அறிக்கையை செய்தித் துறை வெளியிட்டது என்ன தவறு?**

**அவர் செய்யலாம் இவர் செய்யக் கூடாது என்பதுதான் சனாதனம்!**



நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நேற்று முன்தினம் (11.09.2023), சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில், திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் 20 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச்.அசன் மவுலானா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், ஆணையர் க.வீ.முரளீதரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மஞ்சள் அழுகல் நோய் பாதிப்பில் இருந்து

# கரும்பு விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது!

## எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி விவரம் தெரியாமல் அறிக்கை வெளியிட்டுள்ளார்

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலடி!

சென்னை, செப்.13-

மஞ்சள் அழுகல் நோய் பாதிப்பில் இருந்து கரும்பு பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் இதன் மூலம் விவசாயிகளின் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்திருப்பதுடன் உண்மை தெரியாமல் விவரம் தெரியாமல் எதிர்க்கட்சித் தலைவர் அறிக்கை வெளியிட்டுள்ளார் என்றும் அவர் பதிலடி கொடுத்துள்ளார்.



சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிச்சாமிக்கு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அளித்த மறுப்பு அறிக்கை வருமாறு : -

கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களில் மஞ்சள் அழுகல் நோய், வேர்ப்புழு தாக்குதல் மற்றும் காட்டுப்பன்றி தொல்லையால் கரும்பு பயிர்கள் பாதிப்படைந்து விவசாயிகள் நஷ்டம் அடைந்துள்ளதாகவும் பல சர்க்கரை ஆலைகள் கோடிக்கணக்கான ரூபாய் நிலுவையில் வைத்துள்ளதால் கரும்பு பயிரிட்டு விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு உள்ளானதாக எதிர்க்கட்சித் தலைவர் விவரம் தெரியாமல் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

2011 வரை நடைபெற்ற கலைஞர் தலைமையிலான அரசில் தமிழ்நாட்டின் கரும்பு பயிரிடும் பரப்பின் அளவு 2.24 லட்சம் எக்டேராக இருந்தது. ஆனால், பின்னர் வந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் கரும்பு பரப்பளவு கிட்டத்தட்ட 1.29 லட்சம் எக்டேர் குறைந்து, வெறும் 95 ஆயிரமாக மட்டுமே இருந்தது. மேலும், கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளின் எண்ணிக்கையும் 1.50 லட்சமாக இருந்ததை 91 ஆயிரமாக குறைக்கப்பட்டதே நிர்வாகத் திறனற்ற எதிர்கட்சி தலைவர் ஆட்சியில்தான் என்பதை சுலபமாக மறந்து அறிக்கை விடுகிறார். ஆனால் 2021ல் தி.மு.க. ஆட்சி ஏற்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளில் கிட்டத்தட்ட கரும்பு பரப்பளவு 1.50 லட்சம் எக்டேராக உயர்த்தியது தற்போதைய தி.மு.க. ஆட்சியில் தான் என்பதை ஏனோ அறிக்கை திலகத்திற்கு புரியவில்லை.

கரும்பு விவசாயிகளுக்கு 2015-2016 அரவை பருவம் முதல் 20192020 அரவைப் பருவம் வரை, கரும்பு விலை உயர்த்தப்படாமல் ஒரே விலையாக டன் ஒன்றுக்கு ரூபாய் 2,750 மட்டுமே அதிமுக ஆட்சியில் வழங்கப்பட்டு வந்தது. தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் கரும்பு விலை படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது விவசாயிகள் டன் ஒன்றுக்கு ரூபாய் 3,016.25 பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் கரும்பு விவசாயிகளின் உற்பத்திக்கான ஊக்கத்தொகை, சிறப்பு ஊக்கத் தொகை மற்றும் வழிவகை கடனாக சுமார் ரூபாய் 800 கோடி அளவிற்கு தமிழக அரசு நேரடியாக கரும்பு விவசாயிகளுக்கு வழங்கிட சர்க்கரை ஆலைகளுக்கு நிதி உதவியும் வழங்கி உள்ளது.

**ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை!**

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2021 வரை ரூ.419 கோடி அளவில் கரும்பு விவசாயிகளின் நிலுவைப் பணம் பட்டுவாடா செய்யாமல் கரும்பு விவசாயிகளை தவிக்க விட்டவர் தான் தற்போது ஆடு நனைகிறதே என ஓநாய் அழுத கதையாக கரும்பு விவசாயிகளின் நிலுவைத் தொகை பற்றி குறிப்பிட்டுள்ளார். தற்போது நிலுவைத் தொகை முழுவதையும் 2021-22 பருவம் வரை அனைத்து கூட்டுறவு, பொது மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகள் மூலம் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விட்டது என்பது ஆட்சியிலிருந்து இறங்கும் போது கஜானாவையே சுரண்டிவிட்டுச் சென்ற கல்லாபெட்டி எடப்பாடி பழனிச்சாமிக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

நடப்புப் பருவத்தில் தனியார் சர்க்கரை ஆலைகள் மட்டுமே கரும்பு விவசாயிகளுக்கு ரூ.17 கோடி அளவிற்கு நிலுவைத் தொகை வழங்க வேண்டும். இது குறித்தும் இத்துறையினால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

கலைஞர் அவர்களின் ஆட்சியில் 2010ஆம் ஆண்டு சுமார் ரூ.1,240 கோடி மதிப்பீட்டில் 12 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு அறிவிக் கப்பட்ட இணை மின் திட்டம் மற்றும் ஆலை நவீனமயமாக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. முந்தைய அ.தி.மு.க. அரசின் திறனற்ற ஆட்சியின் காரணமாக திட்டம் முடியாமலேயே 90 சதவீதம் ஒப்பந்ததாரர்களுக்கு பணம் வழங்கி, 2021வரை இத்திட்டத்தில் எந்தவித முன்னேற்றமும் இன்றி, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.1,400 கோடி அளவில் கூடுதல் வட்டி சுமையை விட்டு விட்டு சென்றதுதான் எடப்பாடி ஆட்சியின் மற்றும் ஒரு சாதனை.

2021ல் சர்க்கரை ஆலைகளின் 8.97 சதவீதமாக இருந்த கரும்பு பிழிதிறன் 9.33 சதவீதமாக உயர்த்தப்பட்டது. இதன் மூலம் ரூ.100 கோடி அளவிற்கு கூடுதல் வருவாய் கிடைத்திட இத்துறை மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

கரும்பு பயிரிடும் விவசாயிகள் மண்வளம் குன்றிய நிலையில் போதிய சத்து இல்லாததன் காரணமாக மஞ்சள் அழுகல் நோய் (Pokkah Boeng) வேர்ப்புழு நோய் போன்ற நோய்கள் தாக்குவது இயற்கையானது ஆகும். பொதுவாக மஞ்சள் அழுகல் நோயினால் பாதிக்கப்பட்ட கரும்பு பயிர் சாகுபடி செய்யப்பட்ட வயல்களை கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் மற்றும் கோயம்புத்தூர் கரும்பு இனப்பெருக்க நிறுவன விஞ்ஞானிகள் மூலம் வயல் ஆய்வு செய்யப்பட்டு, கடைபிடிக்கப்பட வேண்டிய நோய் கட்டுப்பாட்டு முறைகள் விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. மிகவும் அதிகமாக மஞ்சள் அழுகல் நோயால் பாதிக்கப்பட்ட கரும்பு வயல்கள் கண்டறியப்பட்டு, அங்குள்ள கரும்பினை அவசர கால ஏற்பாடாக அருகில் உள்ள சர்க்கரை ஆலைக்கு அனுப்ப உத்தரவு வழங்கப்பட்டு விவசாயிகள் நலன் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளின் நலன் பாதுகாப்பு!**

மேலும், கரும்பு விவசாயிகளுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன், பூச்சி தாக்குதல் மற்றும் மஞ்சள் அழுகல் நோய் தாக்குதல் ஏற்படாமல் இருக்க எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும், கரும்பு இனப்பெருக்க நிறுவனம், கோயம்புத்தூர் மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மூலம் கருத்தரங்குகள், பயிற்சிகள், வயல் விழாக்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வாயிலாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும் கரும்புப் பயிர் காட்டுப்பன்றிகளால் பாதிப்புக்குள்ளாவதைத் தவிர்க்கும் பொருட்டு கரும்பு விவசாயிகளுக்கு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் தயார் செய்யப்படும் காட்டுப்பன்றி விரட்டும் திரவம் கரும்பு விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது.

நிர்வாகத் திறனற்ற எடப்பாடி ஆட்சியில் சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எந்த வித நன்மையும் கிடைக்கவில்லை. புதிய நியமனங்கள் ஏதுமில்லை. 2018க்குப் பிறகு ஊதியப் பிரச்சினையும் கண்டுகொள்ளப்படவில்லை. கருணை அடிப்படையில் நியமனம் நடைபெறாமல் இருந்து, இதனால் கரும்பு சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள் குறைந்து போனது இவர் கண்ணில் 2021 வரை படவில்லை. சர்க்கரை ஆலைகளில் காலியாக உள்ள பொதுத் தொகுப்பு அலுவலர்கள் மற்றும் ஊதியக் குழுவின் கீழ் உள்ள பணியாளர்களின் காலிப்பணியிடங்கள் ஆலைகள் தேவைகளைக் கருத்தில் கொண்டு விரைந்து நிரப்பிட நடவடிக்கைகளையும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதைய அரசு கருணை அடிப்படையில் பணி நியமனமும், சுமார் 170 பேருக்கு பதவி உயர்வும் வெவ்வேறு நிலைகளில் அளிக்கப்பட்டது. கோரிக்கை வைக்காமலேயே ஊதிய உயர்விற்காக மறுசீரமைப்பு குழு அமைக்கப்பட்டு, வெகுவிரைவில் ஊதிய உயர்வும் வழங்கப்பட உள்ளது. இவ்வாறு கரும்பு விவசாயிகள், தொழிலாளர்கள் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகள் நலன் பாதுகாக்கப்பட்டது.

**கேட்காமலேயே கொடுக்கும் அரசு!**

இவ்வாறு கேட்காமலேயே கொடுக்கும் இவ்வரசின் செயல்பாட்டால், தற்போது கரும்பு பிழிதிறன் உயர்வும், சர்க்கரை கரும்பு பரப்பளவு உயர்வு, கரும்பு விவசாயிகளின் எண்ணிக்கை உயர்வு இவ்வரசின் சாதனையாகும்.

கரும்பு விவசாயிகளைக் கண்போலக் காத்து, அவர்களுக்கு ஏற்படும் துயரங்களைத் துடைத்திட இவ்வரசு எப்பொழுதும் நேசக்கரம் நீட்டிக் கொண்டே இருந்ததன் விளைவாக கரும்பு உற்பத்தி பரப்பு அதிகரித்துக் கொண்டே வருகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் கல்லாப்பெட்டி எடப்பாடி அவர்கள் சுட்டிக்காட்டுவதற்கு முன்பே, பூச்சி, நோய் வருமுன் காப்போம் அடிப்படையில் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் கரும்பு பயிர் நல்ல முறையில் வளர்ந்திடவும், கரும்பு விவசாயிகளுக்கு அவ்வப்போது நிவாரணம் வழங்கிடவும், இவ்வரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது. எந்த ஒரு கரும்பு விவசாயியும் பாதிக்கப்படாத வகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல் படி, எல்லா நடவடிக்கைகளும் சிறப்பாக இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்வதுடன், முந்தைய அ.தி.மு.க. அரசால் கைவிடப்பட்ட சர்க்கரைத் துறையினை செம்மைத் துறையாக்கிட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் சிறப்பாக செயல்படும் அரசாகத் திகழ்ந்து வருகிறது. விவசாயிகள் கோரிக்கை வைக்காமலேயே அவர்களுக்குச் சேர வேண்டிய நிலுவைத்தொகை மற்றும் ஊக்கத்தொகை ஆகிய பணப்பயன்கள் யாவும் உடனுக்குடன் வழங்கப்படுகிறது. அ.தி.மு.க. ஆட்சியில் விடியாமல் இருந்த விவசாயிகளின் வாழ்க்கைத் தரம், வேளாண்மைக்கு என்று தனி நிதி நிலை அறிக்கையின் மூலம், தமிழ்நாடு விவசாயிகள் விடியலை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை. இந்த உண்மையை கூடிய விரைவில் விளங்காத அரசின் முன்னாள் முதல்வரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருக்குப் புரிந்துவிடும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; ஜி20 மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்தியப் பிரதமர் மோடிக்கு அறிவுரை கூறியிருக்கிறாராமே ?

**பெரியதம்பி :** ஆமாம் தம்பி; **இந்தியாவில் மனித உரிமைகள் அனைத்தையும் காலில் போட்டு மிதித்து வருவதையும், ஊடகங்களின் சுதந்திரத்தில் தலையை நுழைத்து அச்சுறுத்துவதையும், கருத்தில் கொண்டு; மனித உரிமைகளை மதிக்க வேண்டும்; இந்தியாவைக் கட்டி எழுப்புவதில் பொதுமக்கள் மற்றும் சுதந்திரமான ஊடகங்களுக்கு உள்ள பங்கை உணர்ந்து செயல்பட வேண்டும்; என்ற மனித உரிமைகள் மற்றும் ஊடகச் சுதந்திரம், ஆகிய இரண்டு முனைகளில் இந்தியப் பிரதமர் சறுக்கி வருவதைக் கவனப்படுத்தி அறிவுரை வழங்கியிருக்கிறார் ஜோ பைடன்! மிகவும் தேவையான அறிவுரைகள்தான் !**

திருப்பத்தூர் மாவட்டத்தில் – சாலை விபத்தில்

# உயிரிழந்த 7 பேர் குடும்பத்தினருக்கு தலா ரூ.1 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 13-

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஏற்பட்டசாலைவிபத்தில்உயிரிழந்தவர்களின்குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி – அளித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்கள்அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டைஅடுத்தஓணான்குட்டை கிராமத்தைச் சேர்ந்த 24நபர்கள்கடந்த8.9.2023 அன்றுதனியார்சுற்றுலாமினி பேருந்து மூலம் பெங்களூருக்கு சுற்றுலா சென்றுவிட்டு நேற்றுமுன்தினம்(11.9.2023) சொந்த ஊர் திரும்பி வரும் பொழுது திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி காவல்நிலைய எல்லைக்குட்பட்ட சண்டியூர் என்ற இடத்தில் வாகன பழுதுகாரணத்தினால்தேசிய நெடுஞ்சாலை சென்டர்மீடியன்ஓரத்தில்நிறுத்திசரிசெய்து கொண்டிருந்தனர். அப்போது இதில் பயணித்த பயணிகள் நிறுத்தப்பட்ட வாகனத்தின் முன் அமர்ந்திருந்தனர். அப்போது பின்னால் வந்த லாரி மினி பேருந்தின் மீது எதிர்பாராதவிதமாக மோதி ஏற்பட்ட விபத்தில் பழுதடைந்த வாகனத்தின் முன்னால் அமர்ந்திருந்த திருமதி.செல்வி (எ) சேட்டம்மாள், க/பெ.பழனி (வயது 55),திருமதி.மீரா,க/பெ.முனுசாமி (வயது 51), திருமதி. தேவகி, க/பெ.சண்முகம் (வயது 50), திருமதி.கலாவதி, க/பெ.குப்புசாமி (வயது 50), திருமதி.சாவித்ரி, க/பெ.குப்பன் (வயது 42), திருமதி. கீதாஞ்சலி, க/பெ.ரஞ்சித் (வயது 35) மற்றும் திருமதி. தெய்வானை, க/பெ. திலீப்குமார்(வயது 32)ஆகிய ஏழு பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடுஅவர்களது குடும்பத்தினருக்கு தலா ஒரு இலட்சம்ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

மேலும்இவ்விபத்தில்காயமடைந்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரிமருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருபவர்களுக்கு நிவாரணத் தொகையாக தலா ஐம்பதாயிரம்ரூபாய்வழங்கிடவும்அவர்களுக்குச் சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின்அவர்கள்தெரிவித்துள்ளார்.

அரியலூர் மாவட்ட மகளிர் அணி,

# மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர், சேலம் சுஜாதா பங்கேற்பு!

அரியலூர், செப்.13-

அரியலூர் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற, மாவட்ட கழக மகளிரணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் கழக மாநில பிரச்சார குழு செயலாளர் சேலம் சுஜாதா, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

இக்கூட்டத்தில் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி ராஜேந்திரன், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் மீனா சாமிநாதன்,

மாவட்ட அவைத் தலைவர் சிவ.மாணிக்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட பொருளாளர் ராஜேந்திரன், மாவட்ட துணை செயலாளர் மு. கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு, ஒன்றிய கழக செயலாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், வா.சௌந்தரராஜன், மா.அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ. கொ. கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் கோபால கிருஷ்ணன், அல்போன்ஸ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.எம். அன்பழகன், இரா.பாலு, சிஆர்.எம்.பொய்யாமொழி, வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் செ. விஜயலட்சுமி, ச.ராணி, பர்வதவர்தினி,அருணா, காந்திமதி,கனகசுப்புலெட்சுமி,

மாவட்ட மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் சி.ராணி, அ.எழிலரசி, ர.மலர்விழி, மு.சித்ரா,வி. பெனிட்டா இவாஞ்சலின், மு.மல்லிகை சுந்தரம், குன்னம் வலைதள பொறுப்பாளர் இலக்கியா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் சுசித்ரா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள்,

மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக மகளிர் உறுப்பினர் படிவத்தினை ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளிடம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், சேலம் சுஜாதா ஆகியோர் வழங்கினார்கள்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் ரூ.298.48 இலட்சம் மதிப்பீட்டில்

# 18 புதிய பல்வேறு துறை சார்ந்த அரசுக் கட்டிடங்கள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!

தஞ்சாவூர் செப்.13-

தஞ்சாவூர் மாவட்டத்தில் 298.48 இலட்சம் மதிப்பீட்டில் 18 புதிய பல்வேறு துறை சார்ந்த அரசுக் கட்டடத்தை பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் . அன்பில் மகேஸ் பொய்யாமொழி , மாவட்ட ஆட்சித்தலைவர் . தீபக் ஜேக்கப், தலைமையில் நேற்று முன்தினம் (11.09.2023) திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம் கோவிலடி ஊராட்சியில் ரூபாய் 22.10 இலட்சம் மதிப்பீட்டில் கோயிலடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் புதிய இரண்டு வகுப்பறை கட்டிடமும், திருக்காட்டுப்பள்ளி ஊராட்சியில் ரூபாய் 38 இலட்சம் மதிப்பீட்டில் துணை வேளாண்மை விரிவாக்கம் அலுவலகமும், தஞ்சாவூர் வட்டம், தஞ்சாவூர் மாநகராட்சி பாலோபா நந்தனம் பொன்னி நகரில் 16 இலட்சம் மதிப்பீட்டில் புது பொது விநியோக அங்காடி கட்டிடமும், மாரியம்மன் கோவில் கரம்பை காந்தி புது தெருவில் ரூபாய் 12.85 இலட்சம் மதிப்பீட்டில் பொது விநியோக அங்காடி கட்டிடமும், நாஞ்சிக்கோட்டை ஊராட்சி மாதாக்கோட்டையில் ரூபாய் 15.83 இலட்சம் மதிப்பீட்டில் பொது விநியோக அங்காடி கட்டிடமும், குருங்குளம் மேற்கு ஊராட்சி தோழகிரிப்பட்டியில் ரூபாய் 21.62 இலட்சம் மதிப்பீட்டில் குருங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் இரண்டு வகுப்பறை கட்டிடமும், குருங்குளம் மேற்கு ஊராட்சியில் ரூபாய் 32.69 இலட்சம் மதிப்பீட்டில் நேரடி கொள்முதல் மையமும், ஒரத்தநாடு வட்டம் ஈச்சங்கோட்டை ஊராட்சியில் ரூபாய் 19.72 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பஞ்சாயத்து அலுவலக கட்டிடமும், பொன்னாப்பூர் கிழக்கு ஊராட்சியில் ரூபாய் 10.19 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடமும், வலையக்காடு தொன்டராம்பட்டு ஊராட்சியில் ரூபாய் 18 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் புதிய இரண்டு வகுப்பறை கட்டிடமும், வோணம் வட்டம், பொன்னாப்பூர் கிழக்கு, பொய்யுண்டார்குடிக்காடு ஊராட்சியில் ரூபாய் 9.08 இலட்சம் மதிப்பீட்டு புதிய அங்கன்வாடி கட்டிடமும், பட்டுக்கோட்டை வட்டம் கரம்பயம் ஊராட்சியில் ரூபாய் 10.19 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடமும், நாட்டுச்சாலை ஊராட்சியில் ரூபாய் 10.93 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடமும், மதுக்கூர் வட்டம் பாவாஜிக்கோட்டை ஊராட்சியில் ரூபாய் 10.19 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடமும், இளங்காடு ஊராட்சியில் ரூபாய் 11 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடமும், பட்டுக்கோட்டை வட்டம் நரசிங்கபுரம் பேய்க்காலிக்காடு ஊராட்சியில் ரூபாய் 11.29 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடமும், நரசிங்கபுரம் மேலமகானக்காடு ஊராட்சியில் ரூபாய் 19.72 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பஞ்சாயத்து அலுவலக கட்டிடம், மகிழங்கோட்டை கூடாலிவயல் ஊராட்சியில் ரூபாய் 9.08 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம் என மொத்தம் ரூ.298.48 இலட்சம் மதிப்பீட்டில் 18 புதிய கட்டிடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (வையாறு), சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் (தஞ்சாவூர்), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் . சண் இராமநாதன், மாவட்ட ஊராட்சி தலைவர் தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) எச்.எஸ்.ஸ்ரீகாந்த் தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, ஒன்றியக் குழுத் தலைவர்கள் . ச.அரங்கநாதன் (எ) கல்லணை செல்லக்கண்ணு (பூதலூர்), .கோ.அரசாபகரன் ( வையாறு), மதி. கே. வைஜெயந்திமாலா (தஞ்சாவூர்), சி.பார்வதி சிவசங்கர் (ஒரத்தநாடு), மதி. செல்வம் சௌந்தர்ராஜன் ( வோணம்), தி.பழனிவேல் (பட்டுக்கோட்டை), வருவாய் கோட்டாட்சியர்கள், இலக்கியா (தஞ்சாவூர்), . அக்பர் அலி (பட்டுக்கோட்டை), தஞ்சாவூர் வேளாண்மை இணை இயக்குனர் .ந.க.நல்லமுத்து ராஜா, தஞ்சாவூர் வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆ.அ.செல்லக்கண் ஞானசீலன், ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் . செல்வராஜ், உதவி இயக்குனர் ஊராட்சிகள் சங்கர் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் சோழீஸ்வரர் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 09 இணையர்களுக்கு தலா ரூ.50,000 /மதிப்பீட்டில் 27 வகையான பொருள்களோடு நடைபெற்ற திருமண நிகழ்ச்சியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் அரசன், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் குமரதுரை, துணை ஆணையர் செந்தில்குமார், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர் இல.பத்மநாபன், துணை செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், ஒன்றிய கழக செயலாளர் கே.சந்திரசேகரன், பேரூர் கழக செயலாளர் செண்பகம் பாலு, மாவட்ட அறங்காவலர் குழுத்தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், குழு உறுப்பினர்கள் ராம.முத்துராமன், கே.பி.கே.ஜெகநாதன், சாமி, ப.கலைச்செல்வி, நாட்ராயன் கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் சந்திரசேகர் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; 'பாரத் பெயர் மாற்றம் பிடிக்காதவர்கள் நாட்டை விட்டு வெளியேறலாம்' என்று மேற்கு வங்க மாநில பா.ஜ.க. எம்.பி. திலிப் கோஷ் என்பவர் எச்சரித்திருக்கிறாரே ?

**பட்டணம் :** ஆமாம் அய்யா; **அது மட்டுமா; 'பா.ஜ.க., மேற்கு வங்கத்தில் ஆட்சிக்கு வந்தால், எல்லா வெளி நாட்டவர் சிலைகளையும் அகற்றுவோம்' என்றும் வாய் நீளம் காட்டியிருக்கிறார்.**

**'நாட்டைவிட்டு வெளியேறலாம்' என்பவர்கள், மீண்டும் ஒன்றிய ஆட்சிக்கு வந்தால், 'பாரத் பெயர் பிடிக்காதவர்கள் தேசத் துரோகிகள்' என்ற பட்டத்தைச் சூட்டி, 'நாடு கடத்தப் படுவார்கள்', 'நாட்டைவிட்டே வெளியேற்றப் படுவார்கள்' என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

**வெளிநாட்டவர் சிலைகளை அகற்றுவோம் – என்பவர்கள்; வெளிநாட்டவர் இங்கே விட்டுச்சென்றுள்ள அடிப்படைக் கட்டமைப்புகளையும் அழித்தொழிப்பார்களா ?**

**அந்த அளவுக்கு அவர்களுக்கு மண்டைக்கனம் அதிகமாகிவிட்டது; மத வெறி அவர்களை ஆட்டி வைக்கிறது.**

**நாடு நலம் பெற வேண்டும் என்ற நாட்டம் கொண்டவர்கள், எச்சரிக்கையாக இருக்க வேண்டிய கட்டம் இது. அத்துடன் அந்த எச்சரிக்கை உணர்வை மற்றவர்களுக்கும் 'ஷேர்' செய்து, கொடுங்கோலர்களின் கோரப் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க முன்வர வேண்டும் !**

# திருவாரூர் கலைஞர் கோட்டத்தில் மாபெரும் சனாதன எதிர்ப்பு கருத்தரங்கு!

## பூண்டி கே.கலைவாணன் அழைப்பு விடுத்து வேண்டுகோள்!

திருவாரூர், செப்13-

திருவாரூர் காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத்தில் 15.09.2023 அன்று நடைபெறும் மாபெரும் சனாதன எதிர்ப்பு கருத்தரங்கிற்கு இளைஞர்கள் மற்றும் மாணவ - மாணவிகள், பொதுமக்கள், கழகத்தினர் உள்ளிட்ட அனைவருக்கும் அழைப்பு விடுத்து மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., அறிக்கை விடுத்துள்ளார்.



அவர்தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாவட்டமான நமது திருவாரூர் மாவட்டத்தில் முதல்வர் - திராவிட நாயகர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 115 வது பிறந்த நாளை முன்னிட்டு ஒன்றிய நகர பேரூர் கிளை மற்றும் வார்டு கழகங்களில் அறிஞர் அண்ணா அவர்களின் படத்திற்கு மரியாதை செலுத்தி கழக கொடியேற்றி சிறப்பிக்க வேண்டும்.

"வேற்றுமையில் ஒற்றுமை" என்னும் உயர்ந்த கொள்கைகளால் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ள இந்திய கலாச்சாரத்தை சீர்குலைக்கும் நோக்கத்திலும், மதத்தாலும் இனத்தாலும் மாறுபட்டு இருந்தாலும் ஒற்றுமை உணர்வோடு தமிழ்நாட்டில் மகிழ்ச்சியோடு வாழும் அனைத்து சமூக மக்களின் ஒற்றுமையை அசைத்துப்பார்க்கும் எண்ணத்தோடும் செயல்படும் மதவாத சக்திகளின் எண்ணங்களுக்கு இடம்தராமல் நல்லாட்சி தந்து, ஒற்றுமையை பேணி உலக அளவில் முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாட்டை வழிநடத்தும் திராவிட நாயகர் முதல்வர் தளபதி அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்கிற வகையில் பல திட்டங்களை தந்து , மக்கள் கல்வியில் உயரவேண்டும் என்னும் தொலைநோக்கு திட்டத்தை செயல்படுத்தியும் வருகிறார்.

இப்படி மக்கள் கல்வியில் முன்னேறிய மாநிலமாக தமிழ்நாடு ஆகிவிட்டால் தங்களின் மதவாத சக்திகளை செயல்படுத்த முடியாது என்கிற எண்ணத்தில் தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்தை தடுக்கும் நோக்கத்தில் திராவிட இயக்க தீரர்களால் அழித்தொழிக்கப்பட்ட குலக் கல்வி மற்றும் சனாதன செயல்பாடுகளை மீண்டும் கொண்டுவரும் நோக்கத்தில் ஒன்றிய பி.ஜே.பி. அரசு செயல்பாட்டு வருகிறது. அதற்காக ஆளுநர் உள்ளிட்ட உயர்பொறுப்பில் உள்ளவர்களை சட்டத்திற்கு புறம்பாக ஈடுபடுத்தியும் வருகிறது.

இந்த சதியை எதிர்த்து தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் செயல்பட்டுவரும் நிலையில், ஒற்றை செங்கல்லால் உலகையே திரும்பி பார்க்கவைத்த மாநில இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தனது அமைச்சர் பொறுப்புக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் சனாதன கொள்கைகளை ஆதாரங்களுடன் மக்கள் மத்தியில் எடுத்துக் கூறி சனாதனத்தை எதிர்த்து வருகிறார்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை உலக தமிழர்கள் அனைவரும் கொண்டாடிக்கொண்டிருக்கும் இந்த வேளையில் சனாதனத்தை ஒழிக்கும் திராவிட நாயகர் தலைவர் தளபதி, இளைஞர் அணி எழுச்சி நாயகர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் கொள்கைசார்ந்த செயல்பாடுகளுக்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக திருவாரூர் காட்டூர் கலைஞர் கோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட அரங்கில் சனாதன எதிர்ப்பு கருத்தரங்கு 15.09.2023 வெள்ளி அன்று மாலை நடைபெற உள்ளது . இந்த மாநாட்டில் திராவிடர் கழக துணைப்பொதுச்செயலாளர். வழக்குரைஞர் சே.மெ.மதிவதனி உள்ளிட்ட பேச்சாளர்கள் பங்கேற்று பேசவிருக்கின்றனர். அதுசமயம் நம் அன்னைத்தமிழ்நாட்டின் மாண்பு காக்கப்படவும் , நமது சனாதன எதிர்ப்பை காட்டிடவும் அனைத்து இளைஞர்களும், மாணவ - மாணவிகளும், பொதுமக்களும் பெருமளவில் பங்கேற்க அன்புடன் அழைக்கிறேன் என அழைப்பு விடுத்து மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் எம்.எல்.ஏ., அறிக்கை வெளியிட்டுள்ளார்.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், படியூர் அருகில் கழகத் தலைவர் பங்கேற்கும் மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (பூத் கமிட்டி) பாசறை கூட்டம் நடைபெறும் இடத்தில் மேடை அமைக்கும் பணியினை செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டார். இதில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம் பொய்யுண்டார் குடிக்காடு ஊராட்சியில் அங்கன்வாடி மைய கட்டிடத்தினை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில் தஞ்சை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் கா.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சியர் தீபக் ஜேக்கப், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி மற்றும் அரசு அலுவலவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### செப். 17 வேலூர் கழக முப்பெரும் விழாவில்

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

நாமக்கல், செப். 13 -

நாமக்கல் மேற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் திருச்செங்கோடு வேலூர் ரோட்டில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் தளபதியார் அரங்கத்தில் மாவட்ட கழக அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட துணை செயலாளர் மயில்சாமி வரவேற்றார்.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் எஸ்.எம். மதுராசெந்தில் கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் அன்பழகன், மயில்சாமி, சாந்தி, பொருளாளர் ராஜாராம் பொதுக்குழு உறுப்பினர்கள் திருநாவுக்கரசு, ரவிச்சந்திரன், வேலுமணி, சாமிநாதன், சிவக்குமார், இந்திராணிமயில்சாமி,

ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஏ.பி.ஆர்.சண்முகம், எம்.தங்கவேல், கே.செல்வராஜ், வட்டூர் ஜி.தங்கவேல், கு.பழனிவேல், கே.கே.சண்முகம், பி.பி.தனராசு, என். நாச்சிமுத்து, ஏ.இளங்கோவன், ஆர்..செல்வம், நகர கழக செயலாளர்கள் எம்.செல்வம், தா.கார்த்திகேயன், அ. குமார், எஸ்.ஞானசேகரன்,

பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.கருணாநிதி, எம். திருமலை, எம்.ரமேஷ்பாபு, பி.முருகன், எஸ்.ராமமூர்த்தி, எம்.ராமலிங்கம், எஸ்.பி. கார்த்திராஜ், பி.முருகவேல் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.நடேசன், டி.ரங்கசாமி, ஓ.ஆர்.செல்வராஜ், எம்.வெங்கடாசலம்,

இளைஞர் அணி அமைப்பாளர் பாலாஜி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கௌதம், மகளிர் அணி அமைப்பாளர் ஜோதி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ராதிகா, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ரமேஷ், நெசவாளர் அணி அமைப்பாளர் சரவணமுருகன், பொறியாளர் அணி அமைப்பாளர் ஆர்.பெரியசாமி, சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் சேக்தாவூத், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ராஜவேல், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் ராஜவேலு,

தொழிலாளர் அணி அமைப்பாளர் சுரேஷ் குமார், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் இரவிமோகன், விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் கந்தசாமி, மருத்துவர் அணி அமைப்பாளர் பூபதி, அயலக அணி அமைப்பாளர் சாதிக்பாட்ஷா, மீனவர் அணி அமைப்பாளர் ரங்கசாமி (எ) குமார், வர்த்தகர் அணி அமைப்பாளர் கிரிசங்கர், விவசாய அணி அமைப்பாளர் மணியம், தொண்டர் அணி அமைப்பாளர் கருணாகரன், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ரவிச்சந்திரன், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தனகரன், மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்ரமணியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை ஆண்டு முழுவதும் கொண்டாடும் வகையில் நாமக்கல் மேற்கு மாவட்ட சார்பு அணிகளுக்கு தலைமை கழகத்தால் வழங்கப்பட்ட பணியை செவ்வென செய்வது, வருகின்ற செப்டம்பர் 17 ஆம் தேதி வேலூரில் நடைபெறவுள்ள கழக முப்பெரும் விழா மற்றும் கழக பவள விழாவில் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்வது,

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 24.09.2023 அன்று காங்கேயம், படியூரில் நடைபெறவுள்ள வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பாசறை கூட்டத்தில் நமது மாவட்டத்திற்குட்பட்ட மூன்று தொகுதிகளில் உள்ள அனைத்து வாக்குச்சாவடி முகவர்களும் தவறாமல் கலந்து கொள்வது, சேலத்தில் வருகின்ற டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டிற்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தொகுதிக்கு 1000 இளைஞர்கள் பங்கேற்கும் வீதம் செயல்வீரர் கூட்டம் நடத்த வேண்டும்,

திருச்செங்கோடு நகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைத்திட பொது மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான புறவழிச் சாலை திட்டம் கடந்த 13 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டு முடங்கி கிடந்த நிலையில் தற்போது மீண்டும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டு அதற்கு உடனடியாக அனுமதி அளித்து தற்பொழுது முதல் கட்டமாக ராசிபுரம் சாலை மாதா கோவில் முதல் வேலூர் சாலை மீன் கிணறு வரை ரூ.43.37 கோடி மதிப்பீட்டில் திட்டம் துரிதமாக நிறைவேற்றப்பட இதற்குப் பெரும் உதவி புரிந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு, வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோருக்கு நாமக்கல் மேற்கு மாவட்ட கழகத்தின் சார்பாகவும், பொதுமக்கள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்வது பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் தொகுதி, கண்டமங்கலம் மேற்கு ஒன்றியம், மோட்சகுளத்தில் புதிய மின்மாற்றி அமைக்கப்பட்டு அதனை விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினரும், மாநில மருத்துவ அணி இணைச் செயலாளருமான டாக்டர்.இரா.இலட்சுமணன் இயக்கி வைத்தார். உடன் கண்டமங்கலம் மேற்கு ஒன்றியச் செயலாளர் வி.ஜி.பிரபாகரன், வளவனூர் உதவி செயற்பொறியாளர் டி.பிரசன்னா, மோட்சகுளம் உதவி மின்பொறியாளர் ஆர்.மன்சூர்ஷரிப், வணிக ஆய்வாளர் உ.ரமேஷ், அரா.அசேக்குமார், எம்.பி.கனகராஜ், ஆ.ராஜசேகர், கே.ஆர்.ஆர்.ரெட்டியார், பி.குமார், மணிகண்டன், தமிழ், சக்திவேல், கிருஷ்ணராஜ், முத்துகிருஷ்ணன், நாகராஜ், கண்ணன், நாகப்பன், லட்சுமிபதி, சுந்தர்ராஜ், கண்ணன், சேகர் ரெட்டியார், எஸ்.நாகராஜ், ஸ்ரீ கிருஷ்ணபிள்ளை, எஸ்.துரைபத்து, சுரேஷ், சிவகுமார், ஜெயராமன், நாகராஜ், எல்.தீனா, நடனசபேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெ.சு. திருவேங்கடம்

### செப்டம்பர் 12 (2022)



**1954ஆம் ஆண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்ற தொடங்கி கிளாம்பாடி கிளைச் செயலாளராகி, அதனைத் தொடர்ந்து ஒன்றியச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், சட்டதிட்டக்குழு உறுப்பினர், தேர்தல் பணிக்குழுச் செயலாளர், சொத்துப் பாதுகாப்புக்குழுச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் செயலாளர், தலைவர் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர், ஒன்றியக்குழு துணைத் தலைவர், ஒன்றியக்குழு தலைவர், நான்கு முறை கலசப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து, மக்கள் பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**2017ஆம் ஆண்டு திண்டுக்கல்லில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் அவர்கள் திருக்கரங்களால் "அண்ணா விருது" பெற்றவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில், டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து ரூ.34.65 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில் நுட்ப மையத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் கூடுதல் தலைமைச் செயலாளர்,தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை குமார் ஜயந்த், மாவட்ட ஆட்சியர் (பொ) நீலகிரி மாவட்டம் திருமதி. இரா.கீர்த்தி பிரியதர்ஷினி உள்ளிட்ட அரசு துறை அலுவலர்கள், குன்னூர் நகரச் செயலாளர் எம்.இராமசாமி, மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் இர.அன்வர் கான், பொதுக்குழு உறுப்பினர் கா.செல்வம், நகர மன்ற தலைவர் ஷீலா கேத்தரின், துணை தலைவர் ப.மு. வாசிம் ராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.பத்மநாபன், நகர மன்ற உறுப்பினர்கள் ஜாஹீர் உசேன், மணிகண்டன், மன்சூர் மற்றும் கோபி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு

# ரூ.15 கோடி மதிப்பீட்டில் பார்வையாளர்கள் தங்குவதற்கான புதிய கட்டிடம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

சென்னை, செப்.13

சென்னை, அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு, சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் பார்வையாளர்கள் தங்குமிடம் கட்டிடம் கட்டுவதற்காக இடம் தேர்வு செய்வதற்கான ஆய்வை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் மேற்கொண்டார். பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது:-

கடந்த 69 ஆண்டுகளாக இந்தியாவின் 2 வது பழமையான புற்றுநோய் மருத்துவமனை எனும் சிறப்போடு புற்றுநோய்க்கு சிறப்பான சேவையாற்றி வருகின்ற அடையாறு புற்றுநோய் மருத்துவமனை திகழ்கிறது. குறிப்பாக ஒரு ஆண்டிற்கு 1,60,000 பேர் இந்த மருத்துவமனையில் புற்றுநோய்களுக்கு தொடர் சிகிச்சைகளை பெற்று வருகின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் 16,000 புதிய புற்றுநோயாளிகள் இந்த மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வருகின்றனர். இவர்கள் அனைவரும் தங்குவதற்கான நடவடிக்கைகளை நிர்வாகம் செய்திருந்தாலும், கூடுதலான வசதிகள் ஏற்படுத்தும் வகையில், 2023-24 ஆம் ஆண்டு சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் நோயாளிகள் மற்றும் பார்வையாளர்கள் தங்க வைப்பதற்கும், ரூ.1.5 கோடி செலவில், புதிய தங்குமிடம் அமைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. அது தற்போது ஆய்வு செய்யப்பட்டது, மிக விரைவில் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, கழிப்பிட மற்றும் குளியலறை ஆகிய வசதிகளுடன் தங்குமிட கட்டிடம் கட்டப்படவுள்ளது.

இம்மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 1700 க்கும் மேற்பட்ட தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் இக்காப்பீட்டுத் திட்டம் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், ஒரு சில மருத்துவமனைகள் மிகச் சிறப்பாக இந்த திட்டத்தை பயன்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை ஏழை எளிய மக்களுக்கு சிறப்பான புற்றுநோய் சிகிச்சை அளிக்கும் வகையில் இந்த காப்பீட்டுத் திட்டத்தை பயன்படுத்தி வருகிறார்கள். இந்த மருத்துவமனையின் நடமாடும் வாகனத்தின் மூலமும் புற்றுநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரவாயில் பகுதியில், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 144 வது வட்டத்தை சேர்ந்த, 4 வயது சிறுவன் ரக்சன் டெங்கு பாதிப்பால் நேற்று மரணமடைந்துள்ளான். கடந்த 2 ஆம் தேதி டெங்கு பாதிப்பு ஏற்பட்டு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கு அவருக்கு காய்ச்சல் பாதிப்பு குறையாத காரணத்தால், எழும்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சை பலனளிக்காமல் 09.09.2023 அன்று இரவு 8.45 மணியளவில் இந்த குழந்தை மரணடைந்துள்ளது என்பது வருத்தத்திற்குரியதாக உள்ளது.

டெங்கு பாதிப்பு என்பது உலகம் முழுவதிலுமே மழைக்காலங்களிலும், தமிழ்நாட்டில் ஒவ்வொரு வடகிழக்கு பருவ மழையின் போதும் தொடங்குகின்ற ஒன்றாக உள்ளது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கடந்த 3 ஆண்டுகளாக டெங்கு பாதிப்புகளை கட்டுக்குள் கொண்டுவர பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் டெங்கு பாதிப்புகள் கட்டுக்குள் இருந்தாலும், நேற்று வரை 253 பேர் டெங்கு பாதிப்பிற்காக மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, உள்ளாட்சி அமைப்புகளையும் மிகத் தீவிரமாக ஈடுபடுத்தப்பட்டு, கொசு ஒழிப்பு பணிகளை மிகத் தீவிரமாக மேற்கொண்டு டெங்கு பாதிப்பினால் ஏற்படும் இறப்பு விகிதத்தை தீவிரமாக குறைத்து வருகிறார்கள். இந்தாண்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் எண்ணிக்கை 2,12,121 ஆகும். இந்த ஆண்டு மட்டும் இது வரை 3 பேர் டெங்கு பாதிப்பினால் உயிரிழந்துள்ளனர்.

தமிழ்நாடு முழுவதும் கொசு மருந்து அடிக்கும் 16,005 இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளது. டெமிபாஸ் என்று சொல்லப்படும் மருந்து 4,94,241 லிட்டர் கையிருப்பில் உள்ளது. பைத்திரியம் மருந்து 6,67,831 லிட்டர் கையிருப்பில் உள்ளது. டெக்னிகல் மாலத்தியான் மருந்து 1,27,541 லிட்டர் கையிருப்பில் உள்ளது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், அடையாறு புற்றுநோய் மருத்துவமனை இயக்குநர் மரு.கல்பனா, துணைத் தலைவர் மரு.ஹேமந்த் ராஜ், பேராசிரியர் மரு.சுரேந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழுத் தலைவர் துரைராஜ், நகரநல அலுவலர் மரு.ஜெகதீசன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ்விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் வைரபுரத்தில் உள்ள தரைப்பாலத்தை 7 கோடியே 93 லட்சத்தி 87 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் உயர்மட்ட பலமாக கட்டுவதற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பணியை தொடங்கி வைத்தார். உடன் மயிலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, திண்டிவனம் சார் ஆட்சியர் கட்டா ரவி தேஜா, ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் செயற்பொறியாளர் வெள்ளி வேல் ஆகியோர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### லேனா (எ) இரா. இலக்குமணன்

### செப்டம்பர் 13 (1998)



**கழகம் தொடங்கிய காலந்தொட்டு உறுப்பினராகி, சுமார் நாற்பது ஆண்டு காலமாக தனது பகுதியில் கழக வளர்ச்சிக்காக பாடுபட்டவர்.**

**திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக ஒரு முறையும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதோடு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று ஆறு மாத சிறைவாசம் அனுபவித்தார். மொழிப்போர் தியாகி என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தொ.மு.ச.வின் தலைமையிடம் நெய்வேலி!

# தி.மு.கழகம் தொடங்கப்பட்டதே சமூக நீதியை வளர்க்கத்தான்!

## நெய்வேலி சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ. இல்ல மண விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

நெய்வேலி, செப். 13

**கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நெய்வேலி சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ. இல்ல மண விழாவை தலைமை ஏற்று நடத்திவைத்து மணமக்களை வாழ்த்தி உரையாற்றுகையில் தமிழ்நாட்டில் அ.தி.மு.க. என்ற குப்பையை அகற்றிவிட வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் விஷப் பாம்பான பா.ஜ.க. வை ஒழிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டதுடன், தி.மு. கழகம் தொடங்கப்பட்டதே சமூக நீதியை வளர்க்கத்தான் என்றும் குறிப்பிட்டார்.**

**இது குறித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–**

தொழிலாளர்களும், விவசாயிகளும் நிறைந்த இந்த நெய்வேலி பகுதிக்கு வருகை தந்து அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்களின் அன்பு மகன் தம்பி சுமந்த் திருமணத்தை நடத்தி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்னொன்று குறிப்பிட்டது போல, இது சுயமரியாதைத் திருமணம். அதைவிட மிக்க மகிழ்ச்சி எனக்கு என்னவென்றால், இது காதல் திருமணம். இந்தக் காதல் திருமண நிகழ்ச்சி, கிட்டத்தட்ட ஒரு மாநாடு போல மிகச் சிறப்பாக இங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

காலை ஒன்பதரை மணியிலிருந்து மூன்று மணி நேரம் கிட்டத்தட்ட இப்போது மணி 12.30 ஆகபோகிறது. அனைவரும் இருந்து இந்த மணமக்களை வாழ்த்த நீங்கள் அத்தனை பேரும் வந்திருக்கிறீர்கள். இங்கு கூடியிருக்கின்ற கூட்டமே அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள் இந்தப் பகுதியில் எவ்வளவு முக்கியமானவர், எந்தளவுக்கு மக்கள் பணியாற்றியிருக்கிறார் என்று மிகத் தெளிவாகத் தெரிவிக்கும் கூட்டமாக இருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால் ஒட்டு மொத்த தமிழ்நாடே தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய பெரும்பான்மையான அமைச்சர்கள், பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள், நேற்றும் இன்றும் வந்து இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தியிருக்கிறார்கள்.

என்னிடத்திலே இந்தத் திருமணத்திற்கு நான்கு மாதங்களுக்கு முன்பு அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள் தேதி கேட்டார்கள். அப்பொழுதே சொன்னார். தலைவரிடம் தேதி வாங்கி விட்டேன். தலைவரும் வருகிறார். நீங்களும் வரவேண்டும் என்று சொன்னார். நான் கண்டிப்பாக வருகிறேன் என்று சொன்னேன்.

### மணமக்களுக்கு தலைவரின் வாழ்த்து!

இன்னும் சொல்லப்போனால் ஒரு வாரத்திற்கு முன்புதான் இதே கடலூர் மாவட்டத்திற்கு வந்து பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், இளைஞர் அணி நிகழ்ச்சிகளிலெல்லாம் நான் கலந்து கொண்டிருந்தேன். அப்பொழுது கூட அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்களுக்கு ஒரு சந்தேகம் இருந்தது. `இப்போதுதான் வந்துவிட்டுப் போகிறீர்கள். ஒரு வாரத்தில் திருமணம்... வருவீங்களா' என்று கேட்டார்.

நான் கண்டிப்பாக வருவேன் அண்ணன் என்று சொன்னேன். ஏற்கனவே தலைவர் இடத்திலேயே தேதி கேட்டு தலைவர் தலைமையில் திருமணம் நடந்திருக்க வேண்டிய திருமணம். தலைவர் அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் டெல்லி சென்றிருக்கிறார். இன்று காலைதான் தமிழ்நாடு வந்திருக்கிறார். ஆனால், தலைவர் அவர்களுக்கு முழு எண்ணமும், முழு மனமும் இந்தத் திருமணம் சிறப்பாக நடைபெற்றதா, அவருடைய முழு வாழ்த்தும் இந்த மணமக்களுக்கு அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்களுக்குக் கண்டிப்பாக இருக்கும்.

தலைவர் அவர்கள் என்னிடத்திலே தொலைபேசியில் அழைத்து என்னிடத்தில் சொன்னார். `இது மாதிரி நான் டெல்லிக்கு போறேன் நமது சபா ராஜேந்திரன் அவர்களின் இல்லத் திருமண விழா இருக்கிறது. அதற்கு நீ போய்விட்டு வந்துவிடு' என்று சொன்னார்.

தலைவர் அவர்களே... நீங்கள் வருவதாக இருந்தாலும், நான் அந்தத் திருமணத்திற்கு வருவதாகத் தான் இருந்தேன். பரவாயில்லை நான் சென்று உங்களின் சார்பாக, கழகத்தின் சார்பாகக் கலைஞருடைய குடும்பத்தின் சார்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி சார்பாக அந்தத் திருமணத்தை நடத்தி வைக்கின்றேன்.

அவர் பேசும்போது சொன்னார், எங்கள் குடும்பத் திருமணத்திற்கு வந்திருக்கீங்க எங்கள் குடும்பத் திருமணத்திற்கு வந்திருக்கீங்க என்று.

அதிலே ஒரு சின்னத் திருத்தம் . இது எங்கள் வீட்டுத் திருமணம், உங்கள் வீட்டுத் திருமணம் என்று பிரித்துப் பேசாதீர்கள்.

### இது கலைஞருடைய இல்லத் திருமணம்!

இது நம்ம வீட்டுத் திருமணம். இது நம் கலைஞருடைய குடும்பத் திருமணம். வாழ்த்துரை என்று எனக்கு வாய்ப்பளித்தாலும் உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் வரவேற்புரையும் நான் தான் சொல்லி இருக்க வேண்டும் நன்றியுரையும் நான்தான் சொல்லி இருக்க வேண்டும்.

ஏனென்றால், இது எங்களுடைய இல்ல திருமணம்.

மணமக்கள் இருவரும் பொறியாளர்கள். அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து நடக்க வேண்டும். பகுத்தறிவோடும் சுயமரியாதையோடும் நடக்க வேண்டும். இந்த இல்வாழ்வில் அடி எடுத்து வைக்க வேண்டும் என்று நான் கேட்டு கொள்கின்றேன்.




அ.தி.மு.கவில் இ.பி.எஸ் அணி, ஓ.பி. எஸ். அணி, சசிகலா அணி, தீபா அணி, தீபாவுடைய டிரைவர் அணி இப்படிப் பல அணிகள் இருக்கின்றன. அதேபோல் குடும்ப வாழ்க்கை என்று வந்துவிட்டால், எல்லாருடைய குடும்பத்திலும் நடப்பதுதான். மாமியார் அணி, நாத்தனார் அணி எனப் பல அணிகள் பிரிந்து இருக்கக்கூடும். அந்த வாய்ப்பு வரும்.

ஆனால், அதையெல்லாம் சமாளித்து நமது மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அணியைப் போல வர இருக்கின்ற நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற இருக்கின்ற இந்தியா கூட்டணி போல மணமக்கள் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு சுயமரியாதை உணர்வோடு இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

### மூன்று முறை சட்டமன்ற உறுப்பினர்

அண்ணன் ராஜேந்திரன் அவர்கள் கழகத்திலேயே ஒரு மிகச் சிறந்த சீனியர் அனுபவசாலி. முத்தமிழறிஞர் கலைஞருடைய அன்பைப் பெற்றவர். கழகத் தலைவருடைய அன்பையும், பாசத்தையும் பெற்றவர். எந்த எதிர்பார்ப்பும் இன்றி கழகத்திற்காக உழைத்து வருகின்றார். இயக்கப் பணி, மக்கள் பணி என இரண்டு பணிகளிலும் அண்ணன் ராஜேந்திரன் அவர்கள் சிறந்து விளங்குவதால்தான் தொடர்ச்சியாக இப்பகுதியில் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறார்.

மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்றால், அதற்கு அவருடைய மக்கள் பணியே அதற்கு ஒரு எடுத்துக்காட்டு.

2001 ஆம் ஆண்டிலேயே ஒன்றிய கழகச் செயலாளராக, 2006 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகத் தொகுதிக்கு புதிய பேருந்து நிலையம், புதிய காவல் நிலைய கட்டடம் நெல்லிப்குப்பம் முதல் புதுச்சேரி வரை இணைப்பு மேம்பாலங்கள் உள்ளிட்ட அனைத்து திட்டங்களையும் இந்தப் பகுதிக்குக் கொண்டு வந்தவர்தான் அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள்தான்.

தொடர்ந்து மூன்று முறை நெய்வேலி தொகுதியில் தொடர் சட்டமன்ற உறுப்பினராகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

எங்களுக்கெல்லாம் நான் முதல்முறை சட்டமன்ற உறுப்பினர் எனக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டாக ஒரு வழிகாட்டியாக இருக்கிறார் அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள்.

அதேபோல் என்.எல்.சி நிறுவனத்தின் சி.எஸ்.ஆர். நிதி மற்றும் தன் சொந்த செலவில் 40க்கும் மேற்பட்ட ஏரிகளை அண்ணன் ராஜேந்திரன் அவர்கள் தூர்வாரி இருக்கிறார்கள். என்.எல்.சி நிறுவனத்திற்கு இடம் வழங்கியவர்களுக்கு இழப்பீடு கொடுக்கவும், மாற்று இடம் பெற்றவர்களுக்கு பட்டா கிடைக்கவும் அண்ணன் ராஜேந்திரன் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

நம்முடைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 20,000 பேர் கலந்து கொண்ட ஒரு மிகப்பெரிய பிரம்மாண்ட வேலைவாய்ப்பு முகாமை நடத்தி, இந்தப் பகுதியில் இருக்கக்கூடிய இளைஞர்கள் 15,000 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்கியிருக்கிறார், நம்முடைய அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள்.

இந்த நெய்வேலிப் பகுதி நம் கழகத்தினுடைய கோட்டையாக இருக்கிறது என்றால், அதற்கு முக்கிய காரணம் நம்முடைய அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்கள்தான். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இயக்கத்தினுடைய தலைமையிடம் அண்ணா அறிவாலயம் என்றால், தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் தலைமை இடமாக இருப்பது நம்முடைய நெய்வேலிதான்.

கடலூர் மாவட்டத்திலேயே முதல்முறையாக நெய்வேலியில்தான் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் உருவச்சிலை திறக்கப்பட்டது.

இங்கே நிறைய பெண்கள், தாய்மார்கள், கழகத்தினுடைய மூத்த முன்னோடிகள், மணமக்களுடைய உற்றார் உறவினர்கள் எல்லாம் வந்து இருக்கிறீர்கள். நீங்கள் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள வேண்டும்.

> **வ**ர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைத் தூக்கி எறிய வேண்டும். அதற்கு, நீங்கள் அத்தனை பேரும் உங்களுடைய பங்களிப்பு எப்படி கடந்த சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் அத்தனைபேரும் ஒரே முடிவெடுத்து அ.தி.மு.க அடிமைகளை வீட்டுக்கு அனுப்பினீர்கள். 2024 தேர்தல் நமக்கு இன்னொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஒன்றிய அரசை இந்த அடிமைகளுடைய எஜமானர்களையும் விரட்டி அடிக்க வேண்டும். அதற்கு நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்புதான் நாடாளுமன்றத் தேர்தல். அதற்கு நீங்கள் தயாராக வேண்டும். ஒன்றிய அரசு தன்னுடைய சாதனை என்று சொல்ல ஒன்றுகூட இல்லை. நான் பேசியதைத் திரித்து நான் இனப்படுகொலைக்குக் குரல் கொடுத்தேன் என்று தப்பாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

### பெண்களுக்கு சுயமரியாதை கொடுத்தது திராவிட இயக்கம்

ஆணுக்குப் பெண் சமம் என்று சொன்னது நம்முடைய திராவிட இயக்கம்தான். 1929 ஆம் ஆண்டு நடைபெற்ற செங்கல்பட்டு சுயமரியாதை மாநாடுதான் பெண்களுக்கு கல்வி முக்கியம், பெண்களுக்குக் குடும்பத்தில் சம உரிமை வேண்டும், சொத்தில் சம உரிமை வேண்டும், பெண்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் என்ற தீர்மானங்களெல்லாம் நிறைவேற்றப்பட்டது, இந்தச் செங்கல்பட்டு மாவட்டத்தில்தான்.

செங்கல்பட்டு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு செயல் வடிவம் கொடுத்தது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகமும் கலைஞர் அவர்களின் ஆட்சியும்தான்.

பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சம உரிமை, பெண்களுக்குக் கல்வி உதவித் தொகை, உள்ளாட்சித் தேர்தல்களில் 33 சதவிகிதம் இட ஒதுக்கீடு என ஏராளமான திட்டங்களைக் கொடுத்தது திராவிட முன்னேற்றக் கழகம்.

முத்துலட்சுமி அம்மையார் மகப்பேறு உதவித் திட்டம், அன்னை நாகம்மையார் கட்டணமில்லா கல்வித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் கைப்பெண் மறுமலர்ச்சித் திட்டம் என அரசின் திட்டங்களுக்கு சாதனை புரிந்த பெண்களின் பெயர்களைச் சூட்டி அழகு பார்த்தது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு.

அதனுடைய பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டமாகத்தான் இன்று கழக அரசு அமைந்து ஒவ்வொரு திட்டமும் பெண்களுக்காக கழக அரசு அமைந்து நம்முடைய முதலமைச்சர் இட்ட முக்கியமான கையெழுத்தில், முதல் கையெழுத்துப் பெண்களுக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி திட்டம்.

அதேபோல் இப்போது வரஇருக்கக்கூடிய செப்டம்பர் 15ஆம் தேதி தேர்தல் அறிக்கையில் சொன்ன வாக்குறுதி, பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கலைஞர் பெயரிலேயே செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணாவினுடைய பிறந்த நாளில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் மாதம் ஆயிரம் ரூபாய் தலைவர் அவர்கள் வழங்க இருக்கிறார்.

இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள், கடந்த ஒரு ஏழு எட்டு நாட்களாக நான் ஒரு மாநாட்டில் போய் கலந்து கொண்டேன். மாநாட்டின் பெயர் சனாதன ஒழிப்பு மாநாடு. ஒரு உள்ளரங்கத்தில் நடந்தது. நான் பேசிவிட்டுப் போய்விட்டேன்.

### சாமியாரிடம் ரூ.10 கோடி ஏது?

ஒரு நாள் பேசியிருந்தால் போயிருக்கும். அதை விட்டுவிட்டு நான் சொல்லாததையெல்லாம் சொன்னதாகச் சொல்லி இன்றைக்குத் தமிழ்நாடு மட்டுமல்ல இந்தியா முழுக்க ஒன்றிய அமைச்சர் அமித்ஷா பேசுகிறார் ஒன்றிய பிரதமர் பேசுகிறார்.

அதனால் சமீபகாலமாக என்னுடைய தலையை அவர்கள் ஏலம் விடுகிறார்கள். 10 லட்சத்தில் ஆரம்பித்து, இன்று 10 கோடி ரூபாய் அளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது.

என் தலையைச் சீவினால் பத்து கோடி ரூபாய் பரிசு. சொன்னது யாரு சாமியார். நான் கேட்டேன் அந்தச் சாமியார் பத்து கோடி ரூபாய்த் தருகிறேன் என்கிறாரே, அவரிடம் எப்படி இவ்வளவு காசு அவர் சாமியார்தானே என்று சொன்னேன்.

பத்திரிக்கையாளர்கள் அந்தச் சாமியார் கிட்ட கேட்கிறார்கள், சாமியார் சொல்கிறார் என்னிடம் சொத்து மதிப்பு 500 கோடி. 500 கோடி வைத்திருப்பவன் உண்மையான சாமியாராக இருக்க முடியுமா? என்று நீங்கள் நினைத்துப் பாருங்கள்.

அது மட்டுமல்ல என் தலைக்கு எதுக்கு 10 கோடி. பத்து ரூபா சீப்பு கொடுத்தால் நானே சீவிகிட்டு போயிடுவேன்.

கலைஞர் அவர்களுக்கும் இதே மாதிரி ஒரு மிரட்டல் வந்திருக்கிறது. தாய்மார்களெல்லாம் வந்திருக்கிறீர்கள். நீங்கள் எல்லாம் யோசித்துப் பாருங்கள்.

நூறு வருடங்களுக்கு முன்பு பெண்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூடிய நிலைமை கிடையாது, மருத்துவப் படிப்பு படிக்க முடியாது, மருத்துவம் படிக்க வேண்டும் என்றால், சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

கணவன் இறந்தால் நீங்களும் உடனே உடன்கட்டை ஏற வேண்டும் என்று சொன்னார்கள். இதையெல்லாம் ஒழித்ததுதான் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம். இதையெல்லாம் எதிர்த்து குரல் கொடுத்தவர்கள்தான் நம்முடைய அம்பேத்கர் அவர்கள், நம்முடைய பெரியார் அவர்கள், நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நம்முடைய தலைவர் அவர்களும். அவர்கள் பேசாததையெல்லாம் நான் எதுவும் பேசவில்லை. என்னைவிட அதிகமாக அவர்கள்தான் பேசி இருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் உணர வேண்டும்.

எல்லோரும் கேள்வி கேளுங்கள் திரு. நரேந்திர மோடி அவர்களே, என்ன பண்ணி இருக்கீங்க என்று கேள்வி கேளுங்கள்.

ஒன்பது வருடம் நம் நாட்டை ஆட்சி செய்து கொண்டு இருக்கிறீர்களே என்ன செய்து கிழித்தீர்கள் என்று கேட்டோம். அவர் என்ன சொன்னார் நான் மாற்றிக் காட்டுகிறேன் என்று சொன்னார்.

### ஒன்பது ஆண்டு ஆட்சியில் இந்தியாவின் பெயரைத்தான் மாற்றினார்கள்!

இந்தியாவை மாற்றிக் காட்டுகிறேன் என்றார். மாத்திட்டாரு பெயரை மாற்றி விட்டார். இப்போது யாரும் இந்தியா என்று கூப்பிடக்கூடாது ஏன்? நம்முடைய கூட்டணி இந்தியா கூட்டணி என்ற நம்முடைய கூட்டணிக்கு பெயர் வைத்தோம் என்று, யாரும் அந்தப் பெயரை சொல்லக்கூடாது என்று மாற்றி விட்டார்.

இப்படிப்பட்ட ஒரு கேலி கூத்தான ஆட்சி ஒன்றிய ஆட்சி.

எல்லோரும் பேசினார்கள் சனாதனத்தைப் பற்றி உதயநிதி இப்ப பேசவில்லை.

100 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தே நாம் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பிக்கப் பட்டதே இந்த சனாதனத்தை ஒழிக்கத்தான். சமூக நீதியை வளர்க்கத்தான். ஆனால், அதையெல்லாம்விட இன்னும் ஒன்று முக்கியம்.

தொடர்ந்து குரல் கொடுப்போம் இன்னும் 100 ஆண்டுகளானாலும் குரல் கொடுப்போம். ஆனால், அதைவிட மிக மிக முக்கியம்.

### ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசைத் தூக்கி எறிய வேண்டும்

வர இருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைத் தூக்கி எறிய வேண்டும். அதற்கு, நீங்கள் அத்தனை பேரும் உங்களுடைய பங்களிப்பு எப்படி கடந்த சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் அத்தனைபேரும் ஒரே முடிவெடுத்து அ.தி.மு.க அடிமைகளை வீட்டுக்கு அனுப்பினீர்கள்.

2024 தேர்தல் நமக்கு இன்னொரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஒன்றிய அரசை இந்த அடிமைகளுடைய எஜமானர்களையும் விரட்டி அடிக்க வேண்டும். அதற்கு நமக்குக் கிடைத்திருக்கக்கூடிய வாய்ப்புதான் நாடாளுமன்றத் தேர்தல். அதற்கு நீங்கள் தயாராக வேண்டும்.

### மணிப்பூர் மாநிலம் பற்றி எரிகிறது

ஒன்றிய அரசு தன்னுடைய சாதனை என்று சொல்ல ஒன்றுகூட இல்லை. நான் பேசியதைத் திரித்து நான் இனப்படுகொலைக்குக் குரல் கொடுத்தேன் என்று தப்பாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையாகவே இனப்படுகொலை எங்கு நடந்து கொண்டிருக்கிறது. மணிப்பூர் என்ற ஒரு மாநிலம் கிட்டத்தட்ட ஐந்து மாதங்களாக பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இதுவரை 300க்கும் மேற்பட்டோர் இனப்படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த மாநிலத்தை ஆண்டுக் கொண்டிருப்பது யாரு?

பாசிச பா.ஜ.க. அரசு. யாருக்கும் அனுமதி இல்லை. அந்த மாநிலத்திற்குள் செல்வதற்கு. தொலைக்காட்சிகளுக்கெல்லாம்கூட அனுமதி கிடையாது. செய்தி எல்லாம் கிடையாது.

இன்டர்நெட் வசதி கிடையாது. இதைப் பற்றி ஏதாவது ஒரு வார்த்தை பேசினாரா? பாராளுமன்றத்தை கூட்டி நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்த பிறகுதான் ஒன்றிய பிரதமர் மோடி அவர்களே பாராளுமன்றத்திற்கு வருகிறார்.

ஒரு பிரதமர் பாராளுமன்றத்திற்கு வருவதற்கே ஒரு போராட்டம் பண்ண வேண்டியதாக இருக்கிறது. இதுவரை 300க்கும் மேற்பட்டவர்கள் இறந்து இருக்கிறார்கள். தேவாலயங்கள், சர்ச்சுகள் எல்லாம் இடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அதைப் பற்றி எல்லாம் நம்முடைய பிரதமர் அவர்கள் வாயை திறக்கவில்லை.

### ஜி-20 மாநாட்டிற்காக குடிசைகளை திரையிட்டு மறைத்தார்கள்

இன்று ஜி20 மாநாடு டெல்லியில் நடந்து கொண்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய தலைவர்கள் எல்லாம் வந்திருக்கிறார்கள். அங்கு வந்து ஒரு காமெடி பண்ணி இருக்கிறார் நம்முடைய பிரதமர் அவர்கள். அங்கு இருக்கக்கூடிய குடிசைப் பகுதிகளையெல்லாம் யாரும் பார்த்து விடக்கூடாது என்று பெரிய பெரிய தட்டியைப் பச்சை நிறத்தில் பெரிய, பெரிய தட்டியை வைத்து அனைத்துக் குடிசைகளையும் மறைத்துள்ளார். இது தான் ஒன்றிய அரசினுடைய சாதனை.

இன்னொரு சாதனை ஒன்றிய அரசின் ஒன்பது ஆண்டுகால ஊழலை சி.ஏ.ஜி அறிக்கை வெளி வந்திருகிறது. ஒரு கிலோ மீட்டர் ரோடு போடுவதற்கு 250 கோடி ரூபாய் செலவு செய்து இருக்கிறார்கள் என்று யார் சொன்னது சி.ஏ.ஜி. அறிக்கை. அது மட்டுமல்ல,

மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் சில வருடங்களுக்கு முன்பு `ரமணா; என்று ஒரு படம் வந்தது. நீங்கள் எல்லாம் பார்த்திருப்பீர்கள். அதில் செத்துப்போன ஒருத்தரை ஹாஸ்பிடலுக்கு உள்ளே அனுப்பி அவர் உயிரோடு இருக்கிறார் என்று சொல்லி அவரை எப்படியாவது காப்பாற்றி விடுவோம் என்று சொல்லி உறவினர்களிடம் காசை கொள்ளையடிப்பார்கள்.

படத்தில் பார்த்ததை நிஜத்தில் செய்து காட்டி இருக்கிறது இந்த ஒன்றிய பாஜக அரசு. கிட்டத்தட்ட இறந்து போன 88 ஆயிரம் பேருக்கு மருத்துவக் காப்பீடு திட்டம் அளித்து இருக்கிறார்கள்.

### சனாதன ஒழிப்பு பொய்ப்புகார்!

இப்படி ஒவ்வொரு ஊழலாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மூடி மறைக்கத்தான் திசை திருப்பத்தான் என் மீது இந்த சனாதன ஒழிப்புப் பொய் புகாரை கூறிக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நீங்கள் உணர வேண்டும்.

நம்முடைய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பல வருடங்களுக்கு முன்பு ஒரு கதை சொல்லி இருக்கிறார்.

அதை நான் இங்கே நினைவு படுத்த விரும்புகின்றேன்.

நம்முடைய வீட்டை நாம் சுத்தம் செய்து வைத்திருக்கிறோம். அந்த வீட்டில் ஒரு நாள் திடீரென்று பார்த்தால் ஒரு விஷப் பாம்பு உள்ளே வந்துவிட்டது. நாம் ஒரு தடியை எடுத்து நாம் அந்த விஷபாம்பை அடித்து விட்டோம். அடித்தவுடன் அந்த விஷப் பாம்பு வெளியே ஓடிவிட்டது. நிம்மதியாக இருக்கிறோம். வீட்டை சுத்தம் செய்து விட்டோம். இனிமேல் அந்தப் பாம்பு வராது என்று. மறுபடியும் பார்த்தீர்களென்றால், இரண்டு நாட்களில் அந்த விஷப்பாம்பு வீட்டுக்குள் வருகிறது.

### விஷப் பாம்பு ஒன்றிய பா.ஜ.க.!

எப்படி வருகிறது என்று வீட்டிற்கு வெளியே போய்ப் பார்த்தால், அழுக்குப் புதர் மண்டி குப்பை கிடக்கிறது. அந்தக் குப்பையிலிருந்து ஒளிந்துக்கொண்டுதான் அந்த விஷப்பாம்பு வெளியே வருகிறது.

இந்த நேரத்தில் இந்தக் கதையை ஒன்றிய அரசியலுடன் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். நான் வீடு என்று சொன்னது நம்முடைய மாநிலம் தமிழ்நாடு. நான் விஷப் பாம்பு என்று சொன்னது ஒன்றிய பா.ஜ.க.

### அ.தி.மு.க. - குப்பை!

வெளியில் இருக்கக்கூடிய அந்தக் குப்பை என்று சொன்னது அடிமை அ.தி.மு.க. நீங்கள் விஷப் பாம்பை ஒழிக்க வேண்டும் என்றால், அடித்து விரட்ட வேண்டும் என்றால், முதலில் வெளியே இருக்கக்கூடிய அந்தக் குப்பையை அகற்ற வேண்டும். சுத்தம் செய்ய வேண்டும். பா.ஜ.க.வை ஒழிக்க வேண்டும் என்றால், அவர்களின் அடிமைகள் அதிமுகவை வையும் சேர்த்து ஒழித்தால்தான் பா.ஜ.க.வை ஒழிக்க முடியும்.

இந்த மணமக்கள் இருவரும் காதல் திருமணம். அதனால் அவர்களுக்கு நிறைய அட்வைஸ் பண்ண தேவையில்லை. அவர்களிடம் ஒரே ஒரு கோரிக்கை.

பிறக்கின்ற குழந்தை ஆண் குழந்தையோ, பெண் குழந்தையோ அழகான தமிழ் பெயர் வைக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அத்தனை பேர் சார்பாக, தலைவரின் சார்பாக நான் கேட்டுக் கொண்டு மணமக்கள் இருவரும் வாழ்க வாழ்க வாழ்க என்று வாழ்த்தி வாய்ப்பளித்த அண்ணன் சபா ராஜேந்திரன் அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்திற்கும் எனது நன்றியைக் கூறி விடை பெறுகின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



கணியூர் ஊராட்சியில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணி மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு கட்டடத்தை தமிழ்நாடு வீட்டு வசதி, மற்றும் மதுவிலக்கு துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்தார். கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமை வகித்தார். சூலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஏ.வி.அன்பரசு முன்னிலை வகித்தார். இதில் ஒன்றிய துணைச் செயலாளர் நீலாம்பூர் சீனிவாசன். கணியூர் ஊராட்சித் தலைவர் வேலுச்சாமி. ஊராட்சித் துணைத் தலைவர் ராஜு. மயிலம்பட்டி ஊராட்சி மன்ற உறுப்பினர் ஆ.சந்திரசேகரன் .கோவை தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பா. ரமேஷ் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம் கடம்பூர் பகுதியில் குத்தியாலத்தூர், குன்றி மற்றும் கூத்தம்பாளையம் உள்ளிட்ட மலைவாழ் கிராம மக்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நல திட்டங்களை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா வழங்கி பேசினார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், தலைவர், தமிழ்நாடு மாநில மனித உரிமை ஆணையம் நீதியரசர் எஸ். பாஸ்கரன், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மரு.மனீஷ், இயக்குனர் (பழங்குடியினர் நலன்) அண்ணாதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு

# 1000 கோயில்களுக்கு திருகுடமுழுக்கு நடத்தி சரித்திர சாதனை படைத்துள்ளது!

## சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் 20 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் உரை!

சென்னை, செப்.13-

சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில், நேற்று முன்தினம் (11.09.2023), திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயிலில் உள்ள திருமண மண்டபத்தில் 20 இணைகளுக்கு திருமணத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கினார்.



2022-2023 ஆம் ஆண்டிற்க்கான இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில், "ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 25 இணைகள் வீதம் 20 மண்டலங்களில் ஆண்டுதோறும் 500 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணங்கள் நடத்தப்படும்" என அறிவிக்கப்பட்டு 04.12.2022 அன்று சென்னையில் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலும், பிற மாவட்டங்களில் திருக்கோயில்கள் சார்பிலும் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டன.

2023-2024 ஆம் ஆண்டிற்கான மானியக்கோரிக்கையில், "பொருளாதாரத்தில் பின்தங்கிய இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் பொன்தாலி உட்பட ரூ.50,000/ மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி ஒரு மண்டலத்திற்கு 30 இணைகள் வீதம் 600 இணைகளுக்கு திருமணம் நடத்தி வைக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது. அதன் முதற்கட்டமாக 07.07.2023 அன்று சென்னை மண்டலத்திற்குட்பட்ட 34 இணைகளுக்கு சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன.

### அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

அதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் (11.09.2023), திருவான்மியூர், மருந்தீஸ்வரர் திருக்கோயில் திருமண மண்டபத்தில் 20 இணைகளுக்கு திருமணத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நடத்தி வைத்து சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, வாழ்த்தி பேசியதாவது,

சென்னை மாவட்ட திருக்கோயில்கள் சார்பில் இன்றைய தினம் 20 இணைகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்து வாழ்த்துகின்ற பெரும்வாய்ப்பினை பெற்றுள்ளேன்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு சாதனை!

பி.கே.சேகர்பாபு அவர்கள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு இந்த துறைக்கு ஒரு புதிய மரியாதை, கௌரவம் ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. முதலமைச்சர் தளபதி அவர்கள் கூட அவருடைய செயலை பாராட்டியிருக்கின்றார். ஆட்சிக்கு வந்த 2 ஆண்டு காலத்தில் 1,000 திருக்கோயில்களில் திருக்குடமுழுக்கு பெருவிழாவை நடத்தியிருப்பது சரித்திரத்தில் இடம்பெற வேண்டிய, கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற வேண்டிய சாதனையாகும். காரணம் 1,000 குடமுழுக்குகள் நடத்துவது என்பது சாதாரணமான காரியம் அல்ல, நடத்துபவர்கள் ஒரு பக்கம் இருந்தாலும் நடத்துபவர்களை ஊக்குவித்து அதனை திறம்பட செய்கின்ற காரியத்தை சேகர்பாபு அவர்கள் சிறப்பாக செய்திருக்கிறார்.

சங்கத் தமிழர் வரலாற்றில் மதுராந்தக சோழனின் தாயார் செம்பியன் மாதேவி காவிரி கரையில் சுமார் 1008 சிவாலயங்களை எழுப்பினார் என்று வரலாற்றிலேயே படித்தோம். அந்த செம்பியன் மாதேவிக்குப் பிறகு தமிழ்நாட்டில் 1,000 குடமுழுக்குகளைக் கண்ட ஒரே மனிதர் நம்முடைய சேகர்பாபு தான். "இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்" என்று கூறியுள்ளார் வள்ளுவர். அதாவது, இந்த காரியத்தை இவர்தான் சிறப்பாக செய்வார் எனவே அந்த காரியத்தை அவரிடத்தில் கொடுக்க வேண்டும் என்று வள்ளுவர் சொல்கிறார். அதன்படி இந்து சமய அறநிலையத்துறையை சேகர்பாபுவிடம் கொடுத்ததற்கு காரணம் அவர் உண்மையான பக்தர், கோயில்களுக்கும், குடமுழுக்குகளுக்கும் செல்லுகின்றவர். மாதம் தவறாமல் ஐயப்பன் கோயிலுக்கும் செல்பவர். நெற்றியில் திருநீறு இல்லாமல் ஒரு நாளும் இருந்ததில்லை. போலி பக்தியாக இல்லாமல் உண்மையான பக்தி உடையவராக இருந்த காரணத்தால் அவரிடத்தில் இந்து சமய அறநிலையத்துறையை கொடுத்தார்கள்.

எனக்கு ஒரு பத்து பதினைந்து அறநிலையத்துறை அமைச்சர்களை தெரியும். அறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்த போது அறநிலையத்துறைக்கு அமைச்சராக நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் இருந்தார். அவர் கோயிலுக்கு சென்றபோது கொடுத்த திருநீறை அருகில் இருப்பவர்களிடம் கொடுக்காமல் சுவர் மீது கொட்டி விட்டார் என பிரச்சனை ஏற்பட்டதால், அறநிலையத் துறை அமைச்சரை மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. எனவே யாரிடத்தில் எந்த காரியத்தை ஒப்படைத்தால் அது வேகமாக நடக்கும் என்பதை உணர்ந்து முதலமைச்சர் அவர்கள் இந்த துறையை ஒப்படைத்து இருக்கின்றார். அவரை நான் மனதார பாராட்டுகிறேன். அவர் இந்து சமய அறநிலையத்துறையில் உயர்ந்த மனிதனாக இருப்பார் என தெரிவித்துக் கொள்கிறேன்.

### அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கு பாராட்டு!

அதேபோல தம்பி மா.சுப்பிரமணியன் அவர்கள் விளையாட்டு துறையில் வல்லவர். ஒரு நாளைக்கு சுமார் 20 கிலோமீட்டர் தூரம் ஓடக்கூடியவர். உயிரை பணயம் வைத்து வேலை செய்வதில் கெட்டிக்காரர். அதனால் தான் சுகாதாரத்துறை அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. கொரோனா காலத்தில் யாரும் வெளியே வர பயந்த நிலையில் தன் உயிரை பணயம் வைத்து கொரோனா தொற்று பாதிக்கப்பட்டவர்களை தொட்டுப் பார்த்து வைத்தியம் செய்ய சொன்ன ஒரே அமைச்சர் நமது மா.சுப்பிரமணியன் அவர்கள். ஒரு செயலை ஈடுபாட்டோடு செய்தால்தான் வெற்றி பெற முடியும். எனக்கு எந்த துறை வேண்டுமென்று கேட்ட போது எதில் எனக்கு இன்வால்வ்மெண்ட் இருக்கிறதோ அந்தத் துறையை கொடுங்கள் என்று சொன்னேன். எனக்கு அதில் விருப்பம் இருந்ததே காரணமாகும்.

### மணமக்கள் விட்டுக் கொடுத்து வாழவேண்டும்!

கணவனும் மனைவியும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையோடு வாழ்ந்தால்தான் வாழ்க்கை செம்மையாக அமையும். இன்றைக்கு திருமணம் செய்து கொண்ட மணமக்களும் அதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கை என்பது சாதாரணமானது அல்ல. பல்வேறு பிரச்சினைகளை வரும். அந்த நேரத்திலெல்லாம் அனுசரித்து ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க வேண்டும். அப்படி விட்டுக் கொடுக்கின்ற மனப்பான்மை இல்லாததால் குடும்பத்தில் பிரச்சனைகள் உண்டாகிறது. இன்று மணவிழா கண்டுள்ள மணமக்கள் கணவன், மனைவி என்பதை விட நண்பர்களாக, உறவினர்களாக ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கிற மனப்பான்மையோடு வாழ வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

நான் இந்த திருமண விழாவிற்கு வராவிட்டால் கூட சேகர்பாபுவை பார்த்து ஒரு சால்வை போர்த்தி ஆயிரம் பிறை கண்டவனை போல் ஆயிரம் குட முழுக்குகள் நடத்திய அவருக்கு வாழ்த்தைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். இன்றைக்கு அத்தனை பேர் மத்தியிலும் என் வாழ்த்தை அவருக்குத் தெரிவித்து வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார்.

இரண்டாம் கட்டமாக நேற்று தமிழ்நாடு முழுவதும் திருக்கோயில்கள் சார்பில் 183 திருமணங்கள் நடத்தி வைக்கப்பட்டு சீர்வரிசைப் பொருட்கள் வழங்கப்பட்டன. இந்த நிதியாண்டிற்கு திருக்கோயில்கள் சார்பில் நடத்திட அறிவிக்கப்பட்ட 600 திருமணங்களில் 426 திருமணங்கள் இதுவரை நடத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மயிலம் பொம்மபுர ஆதீனம் தவத்திரு சிவஞான பாலய சுவாமிகள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் ஜே.எம்.எச். அசன் மவுலானா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் க.வீ.முரளீதரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் மாவட்டக் கழக அலுவலகம். கலைஞர் மாளிகையில்அவைத்தலைவர். ஜி.கே.சுபாசு தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் மாவட்டக் கழக நிர்வாகிகள் மு கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், கே.டி. மணி, தாமரைக்கண்ணன், ஜி.குமரேவேல், திருநாவுக்கரசு, மேயர்.ஆ ராமச்சந்திரன், மாநகர செயலாளர் பா. ரகுபதி, கே.ஆர். முருகன், வி.கணேசன், ஜே. தினகரன், கே மதி, எம். எம். செரீப், மஞ்சுளா ஆகியோர் இருந்தனர்.



திருப்பூர் வடக்கு மாவட்டம் தெற்கு மாநகரம் 35 வது வட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் வடக்கு மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் ஜே.எம்.யாசர் அராபத் தலைமையில், பி.எஸ். பாண்டியன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் த.சசிகுமார் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் சிறப்புரையாற்றினர். இதில் திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், திருப்பூர் மாநகராட்சி மேயர், திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ்குமார் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### மதத்தின் பெயரால்

# பகைமையை ஒன்றிய அரசே தூண்டி விடுகிறது!

## ப .சிதம்பரம் எம்.பி. குற்றச்சாட்டு!

சிவகங்கை. செப். 13 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி.செய்தியாளர்களிடம் கூறியதாவது:-



நடந்து முடிந்த பல்வேறு மாநில இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி நான்கு இடங்களில் அமோக வெற்றி பெற்றுள்ளது. இது வருகிற 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி பெறப்போகும் வெற்றிக்கு அச்சாரம் ஆகும்.

பா.ஜ.க .இந்தியா என்ற பெயரை விட்டு பாரத் என்று கொண்டு வருவதாக கூறப்படுகிறது. இந்தியா பாரத் இரண்டும் ஒன்று தான். எனவே இந்தியா என்பதை மறைக்க முடியாது.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற முழக்கம் எழுப்பப்படுகிறது. அதை அவர்கள் எளிதாக கொண்டுவர முடியாது.

நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து அனைத்து மாநிலங்கள் நிறைவேற்ற வேண்டும். எனவே அது ஒன்றும் எளிதான காரியம் இல்லை. மக்களைதிசைதிருப்புவதற்காக இத்தகைய செயல்களில் பா.ஜ.க. ஈடுபடுகிறது.

ஜி 20 மாநாட்டிற்கு எதிர்க்கட்சித் தலைவர் கார்கேவிற்கு அழைப்பு தரப்படவில்லை. இது எதிர்க்கட்சிகளை பா.ஜ.க. நடத்தும் தவறான செயல்ஆகும்.

முன்னாள் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி எம்.பி. நடத்திய இந்திய ஒற்றுமை பயணம் நாட்டில் பல்வேறு பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு இமாலய சாதனையாகும். இந்திய மக்களை குமரியில் இருந்து காஷ்மீர் வரை இதன் மூலம் இணைத்துள்ளார். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் ஒற்றுமையை வலியுறுத்தி நடைபெற்ற பேரணியாகும். இதனால் இந்து முஸ்லிம் கிறிஸ்தவர்கள் மற்ற. சமூகத்தினர் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். பா.ஜ.க. வெறுப்புணர்வையும், பகைமையையும் வளர்த்து வருகிறது . இதை மக்கள் நன்றாக புரிந்து கொண்டுள்ளார்கள்.

பணபலம், அதிகார பலம், மூலமாக ஆட்சியை பிடித்து விடலாம் என்று பா.ஜ.க. நினைக்கிறது. அது முடியாது. அதை நாம் ஒற்றுமையுடன் இந்தியா கூட்டணி ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும். கடைசி சொட்டு ரத்தம் இருக்கும் வரை ஒரே மூச்சாக ஒற்றுமையுடன் பாடுபடுவோம்.

இவ்வாறு ப.சிதம்பரம் எம்.பி. கூறினார்.

காரைக்குடி, சிவகங்கையில் ராகுல்காந்தி நடத்திய இந்திய ஒற்றுமை பேரணியின் ஓராண்டு நிறைவினை முன்னிட்டு பேரணி மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய்காந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் ப.சிதம்பரம் எம்.பி. கார்த்தி, ப.சிதம்பரம் எம்.பி., எஸ். மாங்குடி எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. வி.ராஜசேகரன், மாவட்ட துணைத் தலைவர்கள் எம்.ராஜரத்தினம், சண்முகநாதன், நகர் மன்ற உறுப்பினர் தி.விஜயகுமார் வீரகாளை மாநில மகளிர் காங்கிரஸ் துணைத் தலைவர் வித்யாகணபதி உட்பட நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டார்கள்.




நாமக்கல் மேற்கு மாவட்டச் செயற்குழு கூட்டம் திருச்செங்கோட்டில் உள்ள மாவட்டக் கழக அலுவலகம் தளபதியார் அரங்கத்தில் மாவட்டக் கழக அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுராசெந்தில் கூட்டப் பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




செஸ் உலக சேம்பியன்சிப் போட்டியில் சாதித்து தமிழ்நாட்டுக்கு பெருமை தேடித்தந்த பிரக்ஞானந்தா, குகேஷ் மற்றும் உலக பள்ளி செஸ் சேம்பியன்சில் சாதனை படைத்த சென்னை வேலம்மாள் பள்ளி மாணவ மாணவியருக்கு நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு உலகக்கோப்பை செஸ் போட்டியில் இறுதிப்போட்டி வரை சென்ற பிரக்ஞானந்தா, இந்தியாவின் நம்பர் 1 செஸ் வீரர் குகேஷ் உள்ளிட்ட செஸ் வீரர் வீராங்கனையருக்கு ரூ.60 லட்சத்தை பரிசுத்தொகையாக வழங்கினார். எளிய குடும்பத்தில் பிறந்து, தங்கள் திறமையால் தமிழ்நாட்டை உலக அரங்கில் தலைநிமிரச் செய்த பிரக்ஞானந்தா, குகேஷுக்கு வாழ்த்துகள் என்றும், இருவரின் சாதனைப் பயணம் தொடரட்டும் என்றும், உலகின் நம்பர் 1 செஸ் வீரர் ஆவதற்கான அவர்களது வேட்கை வெல்லட்டும் என்றும் குறிப்பிட்டார். உடன் அமைச்சர் பி.கே. சேகர்பாபு, மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள் உள்ளனர்.

### செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா!

# புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை ! திரளாக பங்கேற்பீர்!

## புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகத்தினருக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி வேண்டுகோள்!

புதுக்கோட்டை, செப். 13 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட பொறுப்பாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:



காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும் , தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம் , கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ் நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுய மரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115 வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2023 அன்று காலை 9 மணியளவில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் எனது (அமைச்சர் எஸ்.ரகுபதி) தலைமையிலும், கால நிலை மாற்றம், சுற்று சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் முன்னிலையிலும் அறந்தாங்கி பேருந்துநிலையத்திலிருந்து ஊர்வலமாக புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார். இந் நிகழ்ச்சிக்கான அனைத்து ஏற்பாடுகளையும் அறந்தாங்கி நகர தி.மு.க செயலாளர் க.ராஜேந்திரன் செய்துள்ளார்.

### செப்.15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா! புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்

# புதுக்கோட்டையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை! திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வேண்டுகோள்!

புதுக்கோட்டை, செப்.13 -

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலு வீற்றிருக்கும் செந்தமிழ் அறி ஞர் தமிழ் மொழி உயர்வுக்காகவும் . தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும் , தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை , கண்ணியம் , கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு , நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “ தமிழ் நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் சுய மரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்து வேந்தர் தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115 வது ஆண்டு பிறந்த நாளான 15.9.2023 அன்று காலை 10 மணியளவில்



புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க அலுவலகத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு சென்று அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அது சமயம் புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு. பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைப் பெருந்தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

# தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட ஒருங்கிணைந்த கழக செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் தடங்கம் பெ.சுப்ரமணி – பி.பழனியப்பன் அறிவிப்பு!

தருமபுரி, செப். 13 -

தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர்கள் தடங்கம் பெ.சுப்ரமணி - பி.பழனியப்பன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:




தருமபுரி கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் வருகின்ற 15.09.2023 வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணி அளவில் தருமபுரி வன்னியர் கல்யாண மண்டபத்தில் மாவட்ட அவைத் தலைவர்கள் சி.செல்வராஜ் மற்றும் மனோகரன் ஆகியோர் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சிறப்புரை யாற்றவுள்ளார்.அது சமயம் இந்நாள்,முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளை கழக நிர்வாகிகள், அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**(குறிப்பு** : சார்பு அணிகளின் தலைவர்கள், துணை தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்)

**பொருள்** : 1. செப்17 வேலூரில் நடைபெறும் முப்பெரும்விழா 2. செப்26 அன்று மாநில இளைஞர் அணி செயலாளர் அவர்கள் வருகை. 3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கவிருக்கும் காங்கேயம் பாக முகவர்கள் கூட்டத்தில் பங்கேற்பது குறித்து, கோவை மாநகர், மாவட்ட பாக முகவர்கள் கூட்டம் சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் 4 இடங்களில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ந.கார்த்திக் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாநில நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் சிறப்புரையாற்றினார். கூட்டங்களுக்கு எஸ்.எம்.சாமி, சிங்கை மு.சிவா, ஷேக் அப்துல்லா,மா.நாகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் மாவட்ட, பகுதிக் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் பலர் பங்கேற்றனர்.

### மாவட்டச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமை

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் எஸ்.கோபி அறிவிப்பு!

திருவள்ளூர், செப்.13 -

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் இன்று (13.09.2023 புதன்கிழமை) மாலை 4.00 மணியளவில் கும்முடிப் பூண்டி பைபாஸ் புறவழிச் சாலையில் அமைந்துள்ள நட்சத்திரா ஹோட்டலில் மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது. வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர் எஸ்.அசோக்குமார், துணை தலைவர் ஜி.ரமேஷ் மாவட்ட துணை அமைப்பாளர்கள்; ஏ.சீனிவாசன், எம்.சுரேஷ், கே.மூர்த்தி, கே.சரவணன் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் கும்முடிப்பூண்டி கி.வேணு, க.சுந்தரம், இ.ஏ.பி. சிவாஜி, மாவட்ட நிர்வாகிகள் மு.பகலவன் மு.கதிரவன், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், சி.எச்.சேகர், ஜெ.மூர்த்தி, கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், கன்னிகை ஜி.ஸ்டாலின், ஏ.ஆர்.டி.உதயசூரியன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.வி.ராமமூர்த்தி, பா. செ.குணசேகரன், பி.வெங்கடாசலபதி, கே.சுப்பிரமணி, டாக்டர் பரிமளம் விஸ்வநாதன், ஒன்றிய செயலாளர்கள் கி.வே.ஆனந்தகுமார், மு.மணிபாலன், டி. கே.சந்திரசேகர், எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ், ஆ.சத்தியவேலு, பா.சுகுமாறன், நா. செல்வசேகரன், கா.சு.ஜெகதீசன், பொன்னுசாமி (எ) ஜான், ந.பரிமளம், நகரச் செயலாளர் ஜி.ரவிக்குமார், பேரூர் செயலாளர்கள் இரா.அறிவழகன் பி.முத்து, அபிராமி குமரவேல், கா.சு. தமிழ்உதயன் ஆகியோர் பங்கேற்கின்றனர். ஆகவே கழகத்தின் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டை வழக்கறிஞர் அணி சார்பில் கொண்டாடுதல், புதிய உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் புதுப்பித்தல், வேலூர் நடைபெறவுள்ள கழக முப்பெரும் விழா நிகழ்வுகள், 2024 ஆண்டில் நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் பணிகள் மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து என்று மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் எஸ். கோபி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



திருச்சி தெற்கு மாவட்ட செயலாளரும், அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தனது திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட துவாக்குடி நகராட்சி அன்னை தெரசா முதல் தெருவில் வசிக்கும் பாலசுப்பிரமணியன், திருமதி.பரமேஸ்வரி தம்பதியினரின் வீட்டில் தீ விபத்து ஏற்பட்டதை அறிந்து நேரடியாக அவர்களின் இல்லம் சென்று ஆறுதல் தெரிவித்து நிவாரண உதவித்தொகை வழங்கினார். உடன் நகர செயலாளர் இ.காயாம்பூ மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர் .

5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மிசா. வே. குருநாதன்

16.08.1939 - 13.09.2018



உங்கள் நினைவில் வாழும்

மனைவி: கு. சரோஜா

மகன்கள்: குருசெல்வம், கு. பாண்டியன், கு. தென்னவன்

மருமகன்கள்: திரு.சு. இராஜேந்திரன், திரு.சு. கோவிந்தராஜன்

மகள்கள்: திருமதி விஜயா இராஜேந்திரன், திருமதி கலையரசி கோவிந்தராஜன்

மருமகள்கள்: மீனா குருசெல்வம், லலிதா பாண்டியன், கீதா தென்னவன்

பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள்.

கு. பாண்டியன், ( 98840 74344 )

112 (அ) வது வட்ட அவைத் தலைவர்

ஆயிரம்விளக்கு மேற்கு பகுதி – தி.மு.க, சென்னை மேற்கு மாவட்டம்.

## மருத்துவர்கள் - மருத்துவ மாணவர்கள் தாங்கள் சந்திக்கும் பொதுமக்களிடம்

# உடற்பயிற்சி - உடல் நலம் பேணுவது குறித்து அறிவுறுத்துவீர்!

## சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

சென்னை, செப். 13 -

**சென்னை மருத்துவக் கல்லூரியில் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிக்கான விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி உரையாற்றுகையில் மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், செவிலியர்கள், சுகாதார அலுவலர்கள் தாங்கள் சந்திக்கும் பொது மக்களிடம் உடற்பயிற்சி உடல் நலம் பேணுவது குறித்து அறிவுறுத்துவீர் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**சென்னை மருத்துவக் கல்லூயில் தமிழ்நாடு மருத்துவக் கல்லூரிகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்கி இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

இந்தியாவிலே மிகப் பெரியதும் மிகப் பழமையானதுமான மருத்துவக் கல்லூரியில் நடைபெறும் இந்த இந்த விழாவில் கலந்து கொள்வதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்தக் கல்லூரியில்தான் என்னுடைய தாயாரின் தம்பி ராஜமூர்த்தி அவர்கள் படித்தார். அவரைப் பார்ப்பதற்காக இந்தக் கல்லூரிக்கு நான் சிறுவயதாக இருந்தபோது ஏற்கனவே இரண்டு ஒரு முறைகள் நான் வந்திருக்கின்றேன்.

அப்படிப்பட்ட இந்தக் கல்லூரிக்கு வந்து உங்களை எல்லாம் சந்தித்துப் பரிசு வழங்குவதில், நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். மெட்ராஸ் மெடிக்கல் காலேஜ் தமிழ்நாட்டுக்கு மட்டும் முக்கியமான அடையாளம் அல்ல, இந்தியாவுக்கே மிகவும் முக்கியமான ஒரு அடையாளமாகும்.

சுதந்திரத்துக்கு முன்பே நூற்றாண்டு கண்ட கல்லூரி இந்தக் கல்லூரி... தற்போது இருநூறாவது ஆண்டை நோக்கி இது பயணித்துக் கொண்டிருக்கிறது.

நாட்டின் முதல் பெண் மருத்துவர் (இந்தியாஸ் ஃபர்ஸ்ட் லேடி டாக்டர் )முத்துலட்சுமி ரெட்டி இந்தக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றவர்தான். அவரது பெயரில்தான் நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், `டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி' மகப்பேறு மருத்துவர் நலத்திட்டம் என்ற திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டு, மக்களுக்குப் பயன் அளித்து வருகின்றது

உலகின் தலைசிறந்த மருத்துவர் களை உருவாக்கிய, இந்த மெட்ராஸ் மெடிக்கல் கல்லூரி இன்றளவும் தலைசிறந்த மருத்துவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

இப்படிப் பல பெருமைகளைக் கொண்ட இந்த மருத்துவக் கல்லூரியில் `இன்டர் காலேஜ் விளையாட்டுப் போட்டிகளை' நடத்தி விளையாட்டு வீரர்களுக்குப் பரிசளிப்பு வழங்கும் விழாவில் கலந்துகொண்டு பரிசுகள் வழங்குவதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி.

உடல் நலத்தைப் பாதுகாக்க, விளையாட்டு எவ்வளவு முக்கியமானது என்பதை, மற்றவர்களைவிட மருத்துவக் கல்லூரி மாணவர்களான நீங்கள் அதிகம் அறிவீர்கள்.

மருத்துவர்களும் சரி, மருத்துவ மாணவர்களும் சரி, உங்களைப் பார்க்க வருபவர்களிடம் நீங்கள் கூறும் முதல் அறிவுரை `தினமும் நடைபயிற்சி மேற்கொள்ளுங்கள்' என்பது தான்.

### இளம் வயதினர் நடைபயிற்சி!

முன்பெல்லாம் 50 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் பார்க், பீச், என்று வாக்கிங் போவார்கள். ஆனால், இப்போது அப்படி அல்ல, இளம் வயதினர்கூட அதிகாலையிலேயே எழுந்து ஜாக்கிங், வாக்கிங், சைக்கிளிங் என்று செல்வதைப் பார்க்க முடிகிறது.

எல்லோருக்கும் உடற்பயிற்சி மீது அக்கறை வருவதற்கு மருத்துவர்களும் மருத்துவ மாணவர்களுமே முக்கியக் காரணம்.

தமிழ்நாட்டின் பல்வேறு மருத்துவமனைகளுக்கும் சுகாதார நிலையங்களுக்கும் சென்று நான் ஆய்வுகளை அவ்வப்போது மேற்கொண்டு வருகின்றேன்.

சில நாட்களில் இரவு நேரங்களில் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் போது, அங்குள்ள பயிற்சி மருத்துவ டாக்டர்களுடன் கலந்துரையாடுகின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன்.

மருத்துவர்கள் மருத்துவப் பயிற்சி மாணவர்கள் மற்றும் செவிலியர்கள், என்னை அன்பாக அழைத்துச் சென்று ஒவ்வொரு வார்டாக, ஒவ்வொரு பிரிவாகக் காண்பித்து அங்குள்ள நிலவரங்கள் நடைமுறைகளை விளக்கி கூறுவார்கள்.

### கோவிட் பணியில் மருத்துவர்களின் பங்களிப்பை மறக்க முடியாது!

நான் ஒரு மணி நேரம் ஆய்வு மேற்கொண்டு அங்கு இருந்து கிளம்பி விடுவேன். அதேபோல் அங்கே மருத்துவம் பார்த்துக் கொண்டிருப்பவர்களும், ஒரு வாரமும் இரண்டு வாரமோ இருந்து மருத்துவம் பார்த்துவிட்டு, அங்கிருந்து கிளம்பி சென்று விடுவார்கள். ஆனால், நீங்கள்தான் அங்கேயே தொடர்ந்து, இருந்து மக்கள் சேவையைச் செய்து கொண்டிருக்கிறீர்கள். அதற்காக உங்கள் அனைவரையும் எவ்வளவு பாராட்டினாலும் ஈடாகாது.

மற்ற அரசு ஊழியர்களைப் போல உங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை, பொங்கல், தீபாவளி போன்ற நாட்களில் கூட உங்களுக்கு



விடுமுறை கிடையாது.

குறிப்பாகக் கோவிட் காலத்தில் நீங்கள் ஆற்றிய சிறப்பான பணி என்றும் மறக்க முடியாதது. இந்தியாவிலேயே கோவிட்டிலிருந்து விடுபட்ட முதல் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்ததற்கு மிக முக்கியக் காரணம் மருத்துவர்களும், மருத்துவப் பயிற்சி மாணவர்களும் செவிலியர்களுமான நீங்கள்தான் என்றால், அதை யாராலும் மறுக்கமுடியாது.

உங்கள் நண்பர்களுடன், குடும்பத்தினருடன் உங்களால் நேரத்தை மகிழ்ச்சியாக செலவிட முடியாது. அந்த அளவு கடும் நெருக்கடியான பணிச் சூழலில் நீங்கள் இருக்கிறீர்கள்

இத்தனை பணிச் சுமைக்கும் பணிச் சூழலுக்கும் இடையில் நீங்களெல்லாம் இந்த விளையாட்டுப் போட்டியில், கலந்து கொண்டு விளையாடியதை எண்ணி நான் பெருமை அடைகிறேன். உங்களைப் பாராட்டுகின்றேன்.

விளையாட்டுப் போட்டிகளின் மீது உங்களுக்கு எந்த அளவு ஆர்வம் இருக்கிறதோ, அதே அளவு இந்த விளையாட்டு துறையின் மீது நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு மிகுந்த ஆர்வம் உண்டு. அதனால்தான் விளையாட்டுத்துறையில் நான் வைக்கும் அத்தனை கோரிக்கைகளையும் முன்னின்று நிறைவேற்றித் தந்துகொண்டிருக்கிறார்கள்.

### விளையாட்டுப் போட்டி : தொடர்ச்சியாக நடைபெறுகின்றன!

விளையாட்டுத்துறையில் இதுவரை நிகழ்த்தியுள்ள சாதனைகளையும் எடுத்து வைக்கும் ஒவ்வொரு முன்னெடுப்புகளையும் பற்றி இப்போது நான் குறிப்பிட விரும்பு கின்றேன். கழக அரசு அமைந்த உடன் ஏராளமான போட்டிகளைத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றது.

சென்னையில் நடந்த `செஸ் ஒலிம்பியாட் போட்டி'யை உலகமே வியந்து பார்த்து மனம் திறந்து பாராட்டியது.

உலக ஸ்குவாஸ் போட்டி' `ஏசியன் சாம்பியன்ஷிப் போட்டி' `உலக சர்பிங் போட்டி' என ஏராளமான போட்டிகளை இங்கு நாம் நடத்தி இருக்கின்றோம். பல சர்வதேசப் போட்டிகளை நமது கழக அரசு நடத்தியுள்ளது.

நாம் நடத்திய முதலமைச்சர் விளை யாட்டுக் கோப்பை போட்டிகளில், மூன்று லட்சத்து 57 ஆயிரம் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் எனப் பலரும் பங்கேற்றார்கள்.

தமிழ்நாடு ஒரிசா ஆகிய இரண்டு மாநிலங்களுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு, இரு மாநில விளையாட்டு வீரர்களும் தங்களின் விளையாட்டுக் கட்டமைப்புகளைப் பகிர்ந்து கொள்ளவும், பயிற்சி மேற்கொள்ளவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் தமிழ்நாட்டிலிருந்து 25 விளையாட்டு வீரர்கள் ஒரிசாவுக்குச் சென்று, அங்குப் பயிற்சி மேற்கொள்ள இருக்கிறார்கள்.

### வீரர் - வீராங்கனைகளுக்கு ஊக்கத் தொகை!

அதேபோல், தேசிய, சர்வதேசப் போட்டியில் சாதிக்கும் வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்குகின்றோம்.

2021ஆம் ஆண்டு முதல் இதுவரை ரூபாய் 65 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். அதேபோல், மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கும் உயரிய ஊக்கத் தொகை வழங்க வேண்டும் என்னும் அவர்களுடைய இருபது வருட கோரிக்கையை ஏற்று, முதலமைச்சர் அவர்கள் அதற்கான அரசாணையையும் வழங்கி உள்ளார்கள். அவற்றையும் வழங்கியுள்ளோம்.

உங்கள் அனைவருக்கும் மணிப்பூரில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது தெரியும். கடந்த நான்கு மாதங்களாக மணிப்பூரில் பல வன்முறை சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன. அந்த மாநிலத்தில் விளையாட்டு வீரர்கள் மிகவும் அதிகம்.

அந்த மாநிலத்தில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு உரிய பாதுகாப்பு அங்கு இல்லாததால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், `இங்குத் தமிழ்நாட்டுக்கு வந்து உங்களின் பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள்' என்று அழைப்பு விடுத்தார் அந்த அடிப்படையில், `20 பென்சிங் வாள் வீச்சு' விளையாட்டு வீரர்கள் இங்கு வந்து பயிற்சி மேற்கொண்டு வருகிறார்கள்.

அந்த மணிப்பூர் மாநில விளையாட்டு வீரர்கள் நம்முடைய தமிழ்நாட்டை, நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

விளையாட்டுத்துறைக்கும் விளையாட்டு வீரர்களுக்கும் தமிழ்நாடு அரசு எடுத்து வரும் முன்னெடுப்புகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

மருத்துவர்கள் மருத்துவ மாணவர்கள் செவிலியர்கள் சுகாதாரப் பணியாளர்கள் உங்கள் அனைவருக்கும் என்னுடைய கோரிக்கையை முன் வைக்கிறேன்.

ஒவ்வொரு நாளும் நீங்கள் அனைவரும் ஏராளமான பொதுமக்களை அன்றாடம் சந்திப்பீர்கள். அப்படி நீங்கள் சந்திக்கும்போது அவர்களிடம் உடற்பயிற்சியையும் உடல் நலத்தையும் பேணுவது பற்றி அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றேன்

இந்த விழாவில், நான் அரசியல் பேச விரும்பவில்லை. இந்தியா முழுவதும் ஒரு விஷயத்தைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அது என்ன விஷயம் என்று நான் உங்களுக்குச் சொல்ல தேவையில்லை. அதுவே உங்களுக்குப் புரியும் என்று நான் நினைக்கி ன்றேன்.

தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் கலைஞர் அவர்களும் இளைஞர்களிடம் எந்த ஒரு விஷயத்தையும் பகுத்தறிவு கொண்டு ஆய்ந்து ஏற்றுக்கொள்ளுங்கள் என அறிவுறுத்தி வந்தார்கள்.

எனவே, ஒரு விஷயத்தைத் தவிர்த்து, ஆய்ந்து ஆய்வுசெய்து அதில் உள்ள உண்மைத் தன்மையை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இத்தனை பெண்கள் இப்போது மருத்துவம் படிக்கிறீர்கள் என்றால், அதற்குக் காரணம் திராவிட இயக்கம்.

டாக்டருக்குப் படிக்க வேண்டும் என்றால், சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்று கூறினார்கள். அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து பெண்களை, இன்று கல்வியிலும் மருத்துவத்திலும் மேன்மேடையச் செய்திருக்கிறோம் என்றால், அது நம் திராவிட இயக்கத்தின் சாதனையாகும்.

இதைத்தான் ஆறு நாட்களுக்கு முன்பு, நான் ஒரு மேடையில் பேசினேன். இதை நான் பேசியது சரியா தப்பா என்பதை நீங்கள் யோசித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். நான் என்ன பேசினேன், என்ன அர்த்தத்தில் பேசினேன், என்பதை நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும். திராவிட இயக்கத்தால் உங்கள் குடும்பத்திற்கு என்ன பலன் கிடைத்திருக்கிறது, என்பதை நீங்கள் ஆராய்ந்துப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று, நான் கேட்டுக் கொள்கின்றேன். விளையாட்டுப் போட்டிகளில் பரிசு பெற்றுள்ளவர்களுக்கும் அனைத்து மாணவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களைக் கூறி, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா!

### மாவட்டச் செயலாளர் தே. மதியழகன் அறிக்கை

*கிருஷ்ணகிரி, செப்.13-*

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்தநாள் விழா, மாவட்ட செயற்குழு கூட்டம், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அணிகளின் நிர்வாகிகள் அறிமுகம் குறித்த

மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

தென்னாட்டு பெர்னாட்ஷா, திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்தவரும், நம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கியவருமான பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் 115 வது பிறந்தநாள் விழா வருகிற 15ம் தேதி வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் வெகு சிறப்பாக கொண்டாடப்பட உள்ளது.

அதேபோல கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்திலும் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி 15 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும்,

பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் எம்.எல்.ஏ. எனது தலைமையில்

கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு

தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு மாலை அணிவித்து, பொது மக்களுக்கு இனிப்பு வழங்க உள்ளார்.

இதனைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக தலைவரும், தமிழக முதலமைச்சருமான தளபதி யார் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்டு இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத உன்னத திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை காஞ்சிபுரத்தில் கழகத் தலைவர், தமிழக முதல்வர் தளபதியார் அவர்கள் துவக்கி வைக்க உள்ளார்.

இதனை தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டம், ஜெகதேவி கிராமத்தில் தமிழக அரசின் சார்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் விழா நடைபெற உள்ளது. இந்த விழாவிலும் தமிழக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சரும்,

கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு மகளிருக்கு உரிமை தொகை வழங்க உள்ளார்கள்.

இதனை தொடர்ந்து



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் மற்றும் புதியதாக நியமிக்கப்பட்டுள்ள அணிகளின் நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம் ஜெகதேவியில் நடைபெற உள்ளது.

இந்த விழாக்களில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில நிர்வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத்தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், மகளிர் அணியினர், மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர், கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னதாக ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கிளை கழக செயலாளர்கள் அவர்கள் சார்ந்த பகுதிகளில் பேரறிஞர் அண்ணா அவர்களின் படம் வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி விட்டு வந்து இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட செயற்குழுக் கூட்ட பொருள்

1. திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி செயலாளரும்,

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 25.09.2023 திங்கட்கிழமை அன்று கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு வருகை குறித்து.

2. கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குவது தொடர்பாக.

3. அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து.

4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அறிக்கை விடுத்துள்ளார்.

---

### மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தலைமையில்

# கோவை மாநகர் மாவட்டத்தில் பாக முகவர்கள் கூட்டம்!

### எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் சிறப்புரை!

*திருப்பூர், செப். 13 -*

திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் வரும் 24 ஆம் தேதி நடைபெற உள்ள பாக முகவர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்.

இக்கூட்டத்தில் பங்கேற்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் 4 இடங்களில் நடைபெற்றது.

இதில் சிங்காநல்லூர் பகுதி 1 சார்பில் SIHS COLONY பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில் நடந்த நிகழ்ச்சியில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர்

நா.கார்த்திக் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார், கூட்டத்தில் சிங்காநல்லூர் தொகுதி தேர்தல் பார்வையாளர், கழக மாநில நெசவாளரணி செயலாளர்

எஸ்.எல்.டி.ப.சச்சி தானந்தம் பங்கேற்று சிறப்புரையாற்றினார். சிங்காநல்லூர் பகுதி 1 செயலாளர் எஸ்.எம்.சாமி முன்னிலை வகித்தார், நிகழ்ச்சியில், மாநகர் மாவட்ட துணைச் செயலாளர் கோட்டை அப்பாஸ், பொதுக்குழு உறுப்பினர் ஆடிட்டர் சசிகுமார், மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி தலைவர் மருது பாண்டி, சிங்காநல்லூர் பகுதி துணைச் செயலாளர் கஸ்தூரி அருண், இராஜேந்திரன், கீதா, அவைத்தலைவர் என்.டி.சின்னச்சாமி, பொருளாளர் இரமேஷ் குமார், மாவட்டப் பிரதிநிதி செளந்தரராஜன், சி.எம்.வேலுமணி, வெங்கடேசன், சந்திரசேகரன், வட்டக் கழகச் செயலாளர்கள் நா. இராஜேந்திரன், எல்.பி.எப் சண்முகம், சுரேஷ்குமார், தி.இளங்கோவன், மாமன்ற உறுப்பினர்கள் சுமித்ரா தீபக், அயலக அணி ஜனார்த்தனம், கழக நிர்வாகிகள் மற்றும் பாகமுகவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

சிங்காநல்லூர் பகுதிக்கழகம் 2 சார்பில், கேரள சமாஜம் ஹாலில் நடந்த கூட்டத்தில் செயலாளர் சிங்கை மு. சிவா முன்னிலை வகித்தார். தலைமைக் கழகப் பேச்சாளர் சிங்கை பிரபாகரன், அவைத்தலைவர் இராமகிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் திராவிடமணி, கௌரி, பொருளாளர் சம்பத் குமார், மாவட்டப் பிரதிநிதிகள் சு.கண்ணன், பாலமுருகன், திருமுருகன், தினேஷ் குமார், வட்டக்கழகச் செயலாளர்கள் முருகானந்தம், தென்னவர் செல்வம், அன்பு, ஆனந்தகுமார், மாமன்ற உறுப்பினர் ஆதி மகேஸ்வரி, சி.எஸ்.முருகேசன், எஸ்.டி.எஸ்.சரவணன், சி.த.சுகுமார் மற்றும் கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

சிங்காநல்லூர் பகுதிக்கழகம் 3 சார்பில், இராமநாதபுரம் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செயலாளர் ஷேக் அப்துல்லா முன்னிலை வகித்தார், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந.உதயகுமார், மு.மா.ச.முருகன், கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை அமைப்பாளர் கோவை அபு, ராஜ் குமார், பிலவேந்திரன், பகுதி துணைச் செயலாளர் பாரதி நகர் செல்வம் , கவிதா, மாவட்டப் பிரதிநிதி செந்தில் குமார், வட்டக்கழகச் செயலாளர்கள் நியான் குமார், அமானுல்லா, மாமன்ற உறுப்பினர் இராஜேஸ்வரி மேகநாதன், மானூர் புகழேந்தி, முரசொலி வெங்கடகிரி, குப்பனூர் பழனிச்சாமி, பூம்புகார் விஜய், பாலசுப்பிரமணியம், பைந்தமிழ் நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

பீளமேடு பகுதி 2 சார்பில் பாப்பநாயக்கன் பாளையம் வைஷ்ணவா ஹாலில், நடைபெற்ற நிகழ்ச்சியில், பீளமேடு பகுதி 2 செயலாளர் மா. நாகராஜ் முன்னிலை வகித்தார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பால சுப்பிரமணியன், இளைஞரணி அமைப்பாளர் இரா.தனபால், பொறியாளர் அணி அமைப்பாளர் பாபு, மாணவரணி அமைப்பாளர் சிவப்பிரகாஷ், விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பாலமுரளிகிருஷ்ணன், பீளமேடு பகுதி 2 நிர்வாகிகள் கேபிள் இராஜேந்திரன், ஆடிட்டர் ராஜேந்திரன், ஆவை.சதீஷ், இரா.நாகராஜ், சுஜாதா, வட்டக்கழகச் செயலாளர்கள் எஸ்.ஜே.தாஸ், சசிகுமார், ப.மோகன்ராஜ், மாமன்ற உறுப்பினர் அன்னக்கொடி, எத்திராஜ், தி.மு.க. கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். இதில் அனைத்து பாக முகவர்களும் பங்கேற்றனர்.

# சனாதனமும், பாரதமும்: ஆரிய மாயையின் வரலாற்று வடிவங்கள்!

## ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

**அ**ண்ணா தன் நூலுக்கு ஆரிய மாயை என்று பெயர் சூட்டக் காரணம் ஆரியம் பிறரை மயக்கி தன்னை ஏற்கச் செய்யும் தன்மை கொண்டது என்பதைக் குறிக்கத்தான். ஆரியம் என்று ஒன்றுமில்லை; அப்படி இருப்பது போல மாயத்தோற்றம் மட்டும்தான் இருக்கிறது என்ற பொருளில் அவர் அந்த பெயரைச் சூட்டவில்லை. ஆரியம் என்று ஒன்று இருக்கிறது. அது பிறருக்கு நன்மை தருவது போல தோற்றமளித்து அவர்களையும் தன் கருத்தியலை ஏற்கச் செய்கிறது என்பதைக் குறிக்கவே அவர் ஆரிய மாயை என்று பெயர் வைத்தார். நாம் அந்த மாயைக்கு ஆட்படாமல், ஆரியத்தின் உண்மையான தன்மையை அறிய வேண்டும்.

நானும், நண்பர்கள் ரவீந்திரன் ஸ்ரீராமச்சந்திரன், வி.எம்.எஸ். சுபகுணராஜன் ஆகிய மூவரும் சேர்ந்து எழுதியுள்ள “Rule of the Commoner: DMK and the Formations of the Political in Tamil Nadu, 1949-1967” என்ற ஆய்வு நூலில் ஆரிய மாயை என்பதை Aryan Allure என்றுதான் மொழியாக்கம் செய்துள்ளோம். இதற்கு முன்பு செய்தவர்கள் Aryan Illusion என்று மொழியாக்கம் செய்தார்கள். அது தவறான பொருளாகும். ஆங்கிலத்தில் Allure என்றால் கவர்ந்திழுப்பது.

இன்று வரை ஆரியம் அதே வேலையைத்தான் செய்கிறது. இரண்டு வார்த்தைகளை வைத்துக் கொண்டு பெரும் மாய்மாலங்களை செய்கிறார்கள். ஒன்று சனாதனம். மற்றொன்று பாரதம். இரண்டுமே ஆரியர்கள் உருவாக்கிய சமஸ்கிருத மொழிச் சொற்கள். மற்ற மொழிகளிலும், தமிழிலும் புழங்குகின்றன என்றாலும். இந்த இரண்டு சொற்களை எவ்வாறு புரிந்துகொள்வது, அவை குறித்த சர்ச்சை என்ன, ஆரிய மாயை எப்படி செயல்படுகிறது என்பதை விரிவாகப் பார்ப்போம்.









**சனாதனம்**

**தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் ஒருங்கிணைத்த சனாதன ஒழிப்பு மாநாட்டில் பேசிய தி.மு.க இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதனம் என்பதை டெங்கு, காலரா, கொரோனா கிருமிகளை அழிப்பது போல அழிக்க வேண்டும் என்று அற்புதமாக அறை கூவினார். திடீரென்று வானமே இடிந்து விழுந்தது போல அமித் ஷா முதல், உள்ளூர் அம்பிகள் வரை கொந்தளிக்கிறார்கள். நூற்றைம்பது ஆண்டுகளாக தமிழ்நாட்டில் சனாதன எதிர்ப்பு நிலவி வருகிறதே, இப்போது என்ன புதுப் பிரச்சினை என்று பார்த்தால் ஆரியத்தின் தகிடுதத்தங்களை அம்பலப் படுத்தலாம்.**

**சனாதனம் என்பது காலத்தால் அழியாத உயர் நெறி. மனிதர்கள் மகிழ்ச்சியாக, அமைதியாக இணைந்து வாழ உதவும் ஒழுக்க நெறி. அதைப் போய் அழிக்கலாமா என்று தமிழ் தொலைக்காட்சிகளில் ஆரிய முகவர்கள் கேட்கிறார்கள். வட நாட்டில் சனாதன தர்மம் என்பதுதான் இந்து மதத்தின் பெயர்; சனாதனத்தை அழிப்பது என்றால், இந்து மதத்தை அழிப்பது என்று பொருள் என்று மாய்மாலம் செய்கிறார்கள். இதில் ஏற்படும் குழப்பங்கள் கொஞ்ச, நஞ்சமல்ல.**




**தமிழ்நாட்டில் சனாதனம் என்பதன் பொருள் காலத்திற்குப் பொருந்தாத பத்தாம்பசலித்தனம். ஆங்கிலத்தில் Orthodoxy என்பார்கள். அதாவது மூடப் பழக்கங்களை விடாமல் கடைப்பிடிப்பது. மாற்றங்களை ஏற்க மறுப்பது. எல்லா காலங்களிலும் எல்லா மதங்களிலும், சமூகங்களிலும் மாற்றங்களை ஏற்பவர்கள் இருப்பார்கள். மாற்றங்களை ஏற்க மறுத்து பழைய பழக்க, வழக்கங்களையே பின்பற்ற வேண்டும் என்பவர்கள் இருப்பார்கள். இரண்டாவது வகையினர்தான் சனாதனி. அதனால்தான் ஜாதீயத்தை இன்றும் கடைப்பிடிப்பவர்களை சனாதனி என்கிறோம்.**

**எதில் எது சரி? சனாதனம் என்றால் அழியாத மானுடப் பொது நெறியா? சனாதனம் என்றால் இந்து மதமா? சனாதனம் என்றால் வர்ணாஸ்ரமம், ஜாதீயம் உள்ளிட்ட மூடப்பழக்க, வழக்கங்களா?**

**சனாதனம் என்றால் அழியாத மானுடப் பொதுநெறியா?**

தமிழ்நாட்டு தொலைக்காட்சிகளில் பேசும் பல தினுசான சங்கிகள், பார்ப்பனர்கள் இவ்வாறு சனாதனம் என்றால் அழியாத மானுடப் பொதுநெறி என்று பேசுகிறார்கள். சரி, அப்படி எந்த நூலில் கூறியுள்ளது, அதற்கான ஆதாரங்களைக் கூறுங்கள், அந்த நெறிகளுக்கான பட்டியலைக் கூறுங்கள் என்றால் ஏதேதோ பேசு கிறார்களே தவிர, இந்த நூலில் இந்த இடத்தில் இவைதான் நெறிகள், அவற்றின் பெயர்தான் சனாதன தர்மம் என்று சான்றாதாரம் காட்ட மாட்டேன் என்கிறார்கள்.

அதற்கு மாறாக சனாதன தர்மம் என்றால் என்ன என்று புரிந்து கொள்ள உதவியாக அறிஞர் பொ.வேல்சாமி முகநூலில் பகிர்ந்திருந்த 1907ஆம் ஆண்டு வெளியான நூலைப் பார்க்கலாம். இந்த நூலை பலரும் தொலைக்காட்சி விவாதங்களில் மேற்கோள் காட்டுகிறார்கள். இந்த நூலானது “காசிப்பிரதான ஹிந்து வித்யாசாலையின் சம்ரஷணை கமிட்டியார் தம் ஆட்சிக்குட்பட்ட சகல வித்யா சாலைகளிலும் சிறுவர்க்கு மதம், நீதி இவ்விஷயங்கள் கற்பிக்கப்படுவதற்கு” உருவாக்கியது. மூலம் எந்த மொழியில் இருந்தது என்று தெரியாவிட்டாலும், தமிழில் மொழியாக்கம் செய்து 1907ஆம் ஆண்டு “ஸனாதன தர்மம்” என்ற பெயரில் பிராட்வே மினர்வா பிரஸ்ஸில் அச்சடிக்கப்பட்டதான குறிப்புடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*



இந்த நூலில் ஏராளமான சுவாரஸ்யமான விஷயங்கள் உள்ளன. இந்த நூலின் ஏழாம் அத்தியாயத்தில் 150ஆவது பக்கத்தில் நான்கு வருணங்கள் என்பது விளக்கப்பட்டுள்ளது. சனாதன தர்மத்தின் மிக முக்கியமான அம்சமே மக்களை வர்ணங்களாகப் பிரித்திருப்பதுதான் என்று பெருமையாக நூல் கூறுகிறது. ஆனால், இதில் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம் சுவாரஸ்யமானது.

முதலில் நாம் மறுபிறவி கோட்பாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆன்மா வேறு, சரீரம் என அழைக்கப்படும் உடல் வேறு. இந்த ஆன்மா என்பதுதான் குழந்தைப் பருவத்திலிருந்து ஒவ்வொரு பிறப்பின்போதும் மெல்ல ஒவ்வொரு வர்ணமாக வளர்ந்து வர வேண்டும். முதல் பிறவியில் அது குழந்தையாக இருக்கும் போது சூத்திர வர்ணத்தின் சரீரத்தில் பிறக்கும். அப்போது பிறர் சொற்படி கேட்டு, பிறருக்கு சேவை செய்ய வேண்டும்.

அப்படிச் சரியாக சேவை செய்தால் பிரமோஷன் கிடைத்து வைசிய வர்ணத்தில் பிறக்கும்; அடுத்து சத்திரிய வர்ணம்; எல்லா பிறவிகளிலும் சரியாக நடந்து கொண்டால் ஆன்மா நல்ல முதிர்ச்சியடைந்து பிராமண வர்ணத்தில் பிறக்கும். அதில் சரியாக நடந்துகொண்டால் அது பிரபஞ்ச முதலாளியான ஈஸ்வரனுடன் கலந்து விடும். இல்லாவிட்டால் மீண்டும் பிறப்புதான்.

இந்த நூல் என்ன கவலைப்படுகிறது என்றால் சமகாலத்தில் ஒரு குறிப்பிட்ட நிலையில் (ஸ்திதியில்) உள்ள ஆன்மா, தவறான சரீரத்தில் பிறந்துவிடு கிறது என்ற நிலையைத் தான். ஆரம்ப நிலையில் உள்ள ஆன்மா பிராமண உடலில் பிறந்து ஒழுங்காகச் செயல்படாமல் குழம்புகிறது. முதிர்ந்த நிலையில் உள்ள ஆன்மா சூத்திரர் உடலில் பிறந்தால், பேசாமல் சேவை செய்யாமல் கலகம் செய்கிறது. இந்த ஆன்மாஉடல் தவறாக இணைந்துவிடுவதில் நிறைய குழப்பம் நிகழ்கிறது என்று இந்த நூல் கூறுகிறது.

இதுதான் சனாதன தர்மத்தின் அடிப்படையா என்று கேட்டால் தமிழ் தொலைக்காட்சி பார்ப்பனர்கள், இல்லை இந்த நூல் இல்லை என்கிறார்கள். காஞ்சி சங்கராச்சாரியார் கூறியதை மேற்கோள் காட்டினால் அதுவும் இல்லை என்கிறார்கள். ஆனால் காலத்தால் அழியாத தர்மம் என்று கிளிப்பிள்ளைகள் போல சொல்கிறார்கள்.

சரி, ஊரிலுள்ள சாமியார்கள், சங்கராச்சாரியார்கள், ஜீயர்கள் எல்லோரையும் கூட்டி இதுதான் 2023ஆம் ஆண்டுக்கான சனாதன தர்மம் என்று தெளிவாக ஒரு நூலை எழுதுங்கள் என்றால் அதையும் செய்வதில்லை. கேட்டால் எங்கள் ஹிந்து மதத்தில் எத்தனையோ பிரிவுகள், சிந்தனைகள் என்பார்கள். வெட்டிப்பேச்சு மாய்மாலத்தைத் தவிர ஆய்வு மனப்பான்மையோ, அறிவு நேர்மையோ இல்லாமல் தமிழ்நாட்டில் ஆரிய மாயை வேலை பார்க்கிறார்கள்.

**சனாதனம் என்றால் இந்து மதமா?**

இங்கேதான் பெரிய பிரச்சினை. காசி வித்தியாசாலை நூல் தெளிவாக சனாதன மதம், ஆரிய மதம், ஹிந்து மதம் எல்லாம் ஒன்றுதான் என்று கூறுகிறது. அதாவது பார்ப்பனர்களின் மதம். இங்கே பிரச்சினை என்னவென்றால் இந்தியா முழுவதும் கும்பிடப்படும் சாமிகள் எல்லாவற்றிலும் பார்ப்பனர்கள் அவர்கள் லேபிளை ஒட்டி விட்டார்கள். எல்லா தரிசனங்களும் இந்து என்கிறார்கள். உதாரணங்களைப் பார்ப்போம்.

தமிழ் சைவ சித்தாந்தம் ஒரு தனித்துவமான தரிசனம். இதைப் பயின்ற சான்றோர்கள் வேத அதாவது வைதீக மரபை ஏற்பதில்லை. சோமசுந்தர பாரதியார் அவர் திருமணத்தில் பார்ப்பன புரோகிதர்களையோ, சடங்குகளையோ அனுமதிக்கவில்லை. தமிழ் சைவ தரிசனத்தில் நால்வர்ண கோட்பாட்டை குறித்த விளக்கங்களோ, விதிகளோ இல்லை. அதனால் வடலூர் ராமலிங்க சுவாமிகள் சமரச சன்மார்க்கம் என்ற தரிசனத்தையும், அருட்பா என்ற பாடல் தொகுப்பையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வழங்கினார்.

ஆனால், இப்போது இவையெல்லாமே இந்து மதம் என்கிறார்கள். ஆளுநர் ரவி சனாதனத்தை எதிர்த்த வள்ளலாரே சனாதனத்தின் உச்சம் என்று கூச்சமில்லாமல் பொய் பேசுகிறார். சத்தியவேல் முருகனார் போன்ற சைவப் பெரியோர்கள் தமிழ் சைவம், இந்து மதம் அல்ல என்று கூறினாலும் அதை ஏற்றுக்கொள்வதில்லை.

இந்தியாவில் உள்ள எத்தனையோ தரிசனங்கள், வழிபாட்டு முறைகள், தெய்வங்கள் ஆரியர்களின் வேதகால மூலங்களுக்குத் தொடர்பில்லாதவை. ஆனால், அனைத்தையும் தங்கள் செல்வாக்குக்குள் அடக்க விரும்பும் பார்ப்பனர்கள் எல்லாவற்றிலும் தங்கள் சனாதன லேபிளை ஒட்டி, எல்லாம் இந்து மதம் என்று சாதிக்கிறார்கள்.

**சனாதனம் என்பது மூடப் பழக்கங்களா?**

**பார்ப்பனரானாலும் வைணவர்களிடையே ஜாதி வேற்றுமை பார்ப்பதை கடுமையாக எதிர்த்தார் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ராமானுஜர். பார்ப்பனரல்லாதவரானாலும் தன் குருவாக நினைத்த திருக்கச்சி நம்பிகளை அவர் மனைவி அவமரியாதை செய்ததால், மனைவியைப் பிரிந்தார். அவருடன் முரண்பட்ட பார்ப்பனர்கள்தான் சனாதனிகள். ராமானுஜர் மாற்றத்தை, சமத்துவத்தை சிந்தித்தார்.**

**விதவை மறுமணத்தை ஏற்க மறுத்தவர்களை சனாதனிகள் என்று அழைத்தார்கள். குழந்தை திருமணத்தை தடை செய்வதை எதிர்த்தவர்கள், தேவதாசிகள் தடை சட்டத்தை எதிர்த்தவர்கள், ஆலய நுழைவை எதிர்த்தவர்கள் எல்லோரையும் சனாதனிகள் என்று அழைத்தார்கள்.**

**எனவே சனாதனம் என்பது மாற்றத்தை மறுக்கும் பிற்போக்கு கொள்கைகள், வர்ணாதர்மம் என்றே பொருள்படும்.**

**பாரதம் என்ற வார்த்தையின் மூலாதாரம் என்ன?**

இந்தியிலும், வேறு பல மொழிகளிலும் பாரத் என்றுதான் ஏற்கனவே குறிப்பிட்டு வருகிறார்கள். ஆங்கிலத்தில்தான் இந்தியா என்ற சொல் புழங்குகிறது. தமிழிலும், வேறு சில மொழிகளிலும் இந்தியா என்று புழங்குகிறார்கள். இப்போது பிரச்சினையே ஆங்கிலத்திலும் இந்தியாவை தவிர்த்து பாரத் என்று கூற வேண்டுமா என்பதுதான்.

இந்தியாவிற்குள் நிலத்தில் பயணம் செய்து வந்தவர்கள் அனைவரும் இமய மலைத்தொடரில் இருந்த கைபர், போலன் கணவாய் வழியாகத்தான் வந்தார்கள். அவ்விதம் வந்தவர்கள் முதலில் எதிர்கொண்டது சிந்து நதி தீரம். சிந்து என்பதை கிரேக்கர்கள் இன்டஸ் என்று அழைத்தார்கள். உதாரணமாக கி.மு. நான்காம் நூற்றாண்டில் மெகஸ்தனிஸ் இண்டிகா என்ற நூலை எழுதினார். இதைத் தொடர்ந்த திரிபுதான் இந்தியா. கொலம்பஸ் அமெரிக்காவுக்கு அருகிலுள்ள தீவுகளை அடைந்தபோது அதை இந்தியா என்று நினைத்ததால் இன்றளவும் அது வெஸ்ட் இண்டீஸ், மேற்கு இந்தியா என்று அழைக்கப்படுகிறது. கிரிக்கெட் ரசிகர்களுக்குத் தெரியும்.

பாரசீகர்களும், அரேபியர்களும் சிந்து என்பதை ஹிந்த் என்று எழுதினார்கள். அதனால் அந்த நதியை ஒட்டிய பகுதியை ஹிந்துஸ்தான் என்றார்கள். எனவே இந்துஸ்தான் என்ற பெயரும் சிந்து நதியை ஒட்டியதுதான். ஆனால் இதே பெயரில் ஹிந்து மதம், ஹிந்தி மொழி என்றெல்லாமும் பெயரிட்டுவிட்டதால் ஹிந்துஸ்தானம் என்பதைவிட இந்தியா என்ற பெயர் சற்றே பொதுத்தன்மையுடன் உள்ளதாலோ என்னவோ இந்தியா என்ற பெயரே ஆங்கிலத்தில் நிலைத்துவிட்டது.

இப்போது பாரதீய ஜனதா கட்சி நமக்கு நாமே வைத்துக்கொண்ட பெயர் பாரதம் என்கிறது. பார்ப்பனர்கள் சொல்லும் மந்திரங்களில் “ஜம்புத்வீபே, பரத கண்டே” என்று சொல்லுவதாகத் தெரிகிறது. தமிழ்த் தாய் வாழ்த்திலும் “சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்” என்று வருகிறது. இதெல்லாம் கண்டம் என்ற நிலப்பரப்பை சுட்டுகின்றன. தேசம் என்பதையல்ல. பின்னால் இருபதாம் நூற்றாண்டில் பாரதியார் தமிழில் பாரத தேசம் என்பதை பிரபலப்படு த்தினார். வங்காளத்திலும், இந்தியிலும் “பாரத் மாதா” என்ற வழக்கு நிலைப்பட்டது.




**இதெல்லாம் சரிதான். இந்தியா சிந்து நதியிலிருந்து வந்தது. பாரதம் எதிலிருந்து வந்தது என்று கேட்டால்தான் ஆரியம் பல்லிளிக்கிறது. ஜட பரதன் என்ற முனிவர் என்கிறது. பரதன் என்ற மன்னன் என்கிறது. இவர்களுக்கெல்லாம் எந்த சரித்திர ஆதாரமும் இல்லை. எல்லாம் புராணக் கற்பனையில் உருவானவை.**

மகாபாரதம் என்று ஒரு இதிகாசத்திற்கு பெயர் இருக்கிறது. இதற்கு ஏன் பாரதம் என்று பெயர் என்றால் அதிலும் திட்டவட்டமாக ஒரு தெளிவில்லை. குரு வம்சத்தின் முக்கியமான மன்னன், முதல் மன்னன் பரதன் என்றெல்லாம் கூறுகிறார்கள்.

**இந்தியாவில் ஆரியர்களுக்கு முன்பே பல்வேறு பண்பாடுகள் நிலவின என்பதில் ஆய்வாளர்கள் யாருக்கும் எந்த ஐயமும் கிடையாது. ஆரிய பண்பாடு மட்டுமே இந்தியாவின் முக்கிய பண்பாடு என்று யாரும் வாதிட முடியாது. திராவிட பண்பாடும் சரி, பல்வேறு பூர்வகுடிகளின் பண்பாட்டு மூலகங்களும் சரி புறக்கணிக்கத்தக்கவை அல்ல. இந்த பண்பாடுகள் பலவும் ஆரியர்களுடன் முரண் உறவைக் கொண்டவை.**

**இந்த நிலையில் அனைவரும் ஏற்றுக்கொண்ட புவியியல் அடிப்படை கொண்ட இந்தியா என்ற பெயரே ஆங்கிலத்தில் புழங்குவதுதானே சரியாக இருக்கும்? இந்தியில் ஏற்கனவே பாரத் என்ற பெயரைத்தான் ரூபாய் நோட்டிலும், பாஸ்போர்ட்டிலும் பயன்படுத்துகிறார்கள். ஆங்கிலத்தில் இந்தியா. இதை இப்போது மாற்றுவது நாட்டை ஆரியமயமாக்கத்தானே? என்றுமடியும் இந்த ஆரிய மாயை?**

நன்றி :
**‘மின்னம்பலம்’**
இணையதளம்

# மோடிஜி இது என்ன புதுக்குழப்பம்?

இந்திய அரசியல் சட்டம் (Indian Constitution, Article No.1) பிரிவு 1ல் இந்திய ஒன்றியத்தின் பெயரும், எல்கையும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மாநிலங்களை உள்ளடக்கிய பகுதியை “பாரதம்” எனவும், வழக்கில் உள்ள ஒன்றியப் பகுதிகளை “இந்தியா” எனவும் பெயரிடப்பட்டுள்ளது (India that is Bharat shall be Union of States) என்ற விளக்கத்துடன் தொடங்குகிறது. இந்திய அரசியல்சட்டத்தின் இந்த ஒரு பிரிவில்தான் “பாரதம்” என்ற சொல் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளதுதேயல்லாமல், மற்ற 395 அரசியல்சட்டப் பிரிவுகளிலோ, 12 அட்டவணைகளிலோ “பாரதம்” என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. அரசியல்சட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் “இந்தியா” என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா என்ற வார்த்தையை இதுவரையிலும் எல்லாத்துறைகளிலும் பயன்படுத்தி வந்த ஒன்றிய பி.ஜே.பி. அரசு திடீரென “பாரதம்” என்ற சொற்றொடரை மாற்றாகப் பயன்படுத்துவதற்கு என்ன காரணம்? அதுவும், சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தொடர் செப்டம்பர் 18ம் தேதி முதல் 22ம் தேதி வரை தொடங்கவுள்ளது என்ற நிலையில் “இந்தியா”, “பாரதம்” ஆக்கப்படுவதற்கான காரணம் என்ன என்பதே வரி செலுத்தும் குடிமக்களின் (Tax Payer) கேள்வியாகும்.

அதுமட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டமே மக்களால் உருவாக்கப்பட்டு 1949-ம் ஆண்டு, நவம்பர் திங்கள் 26-ம் நாள் பிரகடனப்படுத்தி, 1950-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ம் நாள் அமல்படுத்தப்பட்டது. எனவே, மக்களால் உருவாக்கப்பட்டு, அமல்படுத்தப்பட்ட அரசியல் சட்டத்தில் இடம்பெற்றதும், இதுவரையில் பயன்பாட்டில் உள்ளதுமான “இந்தியா” என்ற சொற்றொடரை எடுத்துவிட்டு “பாரதம்” என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு என்ன அவசிய அவசரம் உருவானது என்பதையும், ஒன்றிய அரசு மக்களுக்கு விளக்கிட வேண்டிய கடமையும், பொறுப்பும் உண்டு என்பதற்கான விளக்கம் தேவையில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் இன்றுள்ள எல்லைகளைக் கொண்ட இந்த நிலப்பரப்பு இந்தியா என்று அழைக்கப்படவில்லை. அதேபோல், “பாரதம்” என்றும் அழைக்கப்படவில்லை. “பாரதம்” என்ற சொற்றொடரே புராணங்களில் பயன்படுத்தப்பட்ட வார்த்தையே அல்லாமல், வரலாற்றுப் பதிவுகளில் “பாரதம்” என்ற சொற்றொடர் இடம்பெறவில்லை. புராணங்கள் எல்லாம் வரலாற்றுப்பதிவு களாக இருக்க முடியாது என்பதை விளக்க வேண்டிய தேவையில்லை. இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்படும் பொழுது



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

வரைவுக்குழுத் தலைவராகப் பணியாற்றிய பாபா சாகிப் டாக்டர் அப்பேத்கர் அவர்கள் “பாரதம்” என்ற சொற்றொடரைப் பயன்படுத்தவில்லை. பின்னர், அரசியல்சட்ட நிர்ணயக்குழு உறுப்பினர்கள் சிலரின் அழுத்தம் காரணமாகத்தான் “பாரதம்” என்ற சொற்றொடர் இணைக்கப்பட்டது. “சிந்து நதி” என்ற வேர்ச்சொல்லின் திரிபுச்சொல்தான் ‘இந்தியா’ என்று கூறும் ஆய்வாளர்களும் உண்டு, வேறுபல ஆய்வுகளும் கூட உண்டு.

எது எப்படியிருப்பினும் இந்தியா என்ற சொற்றொடர் ஆங்கிலேயரின் ஆட்சி இங்கு உறுதிப்பட்டவுடன், நிர்வாக ஏற்பாட்டிற்காக அவர்களது ஆதிக்கத்திற்கு உட்பட்டதும், தற்பொழுது பாகிஸ்தான், வங்காள தேசம் உள்ளிட்ட பகுதிகளையும் இணைத்து இந்தியா என்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர், பாகிஸ்தான் - வங்காளதேசம் பிரிந்த பின்னரும், எஞ்சியுள்ள இன்றைய நிலப்பரப்பு இந்தியா என்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்தியா என இன்றுள்ள நிலப்பரப்பை அரசியல்சட்டத்தில் பதிவு செய்துள்ளார்கள். சில அரசியல்சட்ட நிர்ணயசபை உறுப்பினர்களின் அழுத்தம் காரணமாக “பாரதம்” என்ற சொற்றொடரும் சேர்க்கப்பட்டது என்பதை அரசியல்சட்ட நிர்ணய சபை உறுப்பினர்களின் விவாதங்களை ஆழ்ந்து படிப்பவர்களுக்கு மிக நன்றாகவே விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சூழ்நிலையில் திடீரென G20 மாநாட்டுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழ்களில் அழைப்பினை விடுக்கும் குடியரசுத்தலைவரின் பொறுப்பு பாரத குடியரசுத் தலைவர் (President of Bharath) என்று குறிப்பிட்டமைக்கு என்ன காரணம் என்பதை இந்திய ஒன்றிய குடிமக்கள் அறிந்துகொள்ள விரும்புவது இயல்பான உந்துதலாகும். மேலும், சில அனுமானங்களும் மக்கள் மத்தியில் உருவாகியிருக்கின்றன. அதாவது, ஒன்றிய அரசின் சமீபத்திய அறிவிப்பான “ஒரே நாடு - ஒரே தேர்தல்” என்ற அறிவிப்பு, இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் சிறப்புக்கூட்டம் வரும் 18ம் தேதி முதல் 22ம் தேதி வரை நடைபெறும் என்ற அறிவிப்புக்கள் ஆகிய நட வடிக்கைகளின் வெள்ளோட்டமாகத்தான் “பாரதம்” என்ற சொற்றொடர் வழக்கத்திற்கு மாறாக கையாளப்படுகிறது என மக்கள் நம்புவதற்கு வாய்ப்பாக உள்ளது.

“ஒரே நாடு”, அதாவது பல மாநிலங்களை உள்ளடக்கிய ஒன்றியம் (Article No.1 (1) India that is Bharat, shall be Union of States...) என்பதில் கருத்து வேறுபாடு உருவாக வாய்ப்பில்லை. ஆனால், ஒரே தேர்தல் என்பது இந்திய அரசியல் சட்டப்படி சாத்தியமாகுமா? ஒருமுறை ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தலாம், அந்த ஒரே தேர்தலில் அரசியல் கட்சிகள் பெறும் எண்ணிக்கை பலத்தின் அடிப்படையில்தான் மத்தியிலும், மாநிலங்களிலும் ஆட்சிகள் அமையும். அதற்கான வாய்ப்பும் சூழ்நிலைகள் இல்லாமல் போவதற்கும், இடையிலே சீர்குலைந்து போவதற்கும் வாய்ப்புக்கள் உருவாகும் என்பதை கடந்தகால ஒன்றிய - மாநிலங்களின் ஆட்சிகள் உணர்த்தியிருக்கின்றன. எனவே, மாநிலங்கள் ஒன்றிணைந்த ஒரே நாடு சாத்தியம் என்பதில் ஐயமில்லை, ஆனால், ஒரே தேர்தல் என்பது பல்வேறு குழப்பங்களுக்கும், அரசியல்சட்ட சீர்குலைவுகளுக்கும் நிச்சயமாக வழி வகுக்கும்.

அடுத்த 2024ம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா முழுமையும், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணி அமைத்து மதவாத அரசியல் நடத்திவரும் பாரதீய ஜனதாக்கட்சியின் ஒன்றிய ஆட்சியை அப்புறப்படுத்த வேண்டும் என்ற ஒருமித்த கருத்தின் அடிப்படையில், “இந்திய தேசிய அனைத்து மக்களின் வளர்ச்சிக் கூட்டணி” (INDIA - Indian National Developmental Inclusive Alliance) அமைக்கப்பட்டு, முறையே பாட்னாவிலும், பெங்களூருவிலும், மும்பையிலும் கூட்டங்கள் நடைபெற்று, செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்ட நிலையில் “இந்தியா” (INDIA) அரசியல் கூட்டணி பாரதீய ஜனதாக்கட்சியின் நாடாளுமன்றத்தேர்தல் வெற்றிக்குத் தடையாக இருக்குமோ என்ற அச்சத்தின் காரணமாகவே இந்தியா (INDIA) என இதுவரையிலும் நாடு விடுதலை பெற்று 1950ம் ஆண்டு அரசியல் சட்டம் அமலாக்கம் செய்யப்பட்ட காலத்திலிருந்து பழக்கத்திலும், புழக்கத்திலும் இருந்து வந்த பெயரை “பாரதம்” (Bharat) என மாற்றிட முயற்சிக்கிறார்கள் எனக் கருதுவதற்குரிய சூழ்நிலையை ஒன்றிய அரசு இன்று உருவாக்கியுள்ளது.

இதுமட்டுமல்ல, என்றைக்கு 2014-ம் ஆண்டு பாரதீய ஜனதாக்கட்சி நரேந்திரமோடி தலைமையில் உருவானதோ, அன்றிலிருந்து ஆர்.எஸ்.எஸ். என்கின்ற மதவாத அமைப்பின் செயல்திட்ட நிகழ்ச்சி நிரலை தொடர்ந்து வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். அந்த நிகழ்ச்சி நிரலில் ஒன்றுதான் இந்திய அரசியல் சட்டத்தை சீர்குலைத்து செயலற்றதாக்குவதாகும். அரசியல் சட்டத்தின் முகவுரையில் தெரிவித்துள்ள மதச்சார்பற்ற தன்மையில் (Secularism) பா.ஜ.க.விற்கு முற்றிலும் நம்பிக்கையில்லை. ஏன்? கூட்டாசியிலும் (Federalism) நம்பிக்கையில்லை.

எனவே, கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பிலும் அரசியல் சட்டத்தை வலுவிழக்கச் செய்யும் செயல்களில் ஈடுபட்டுவருகிறார்கள். “இந்தியா” கூட்டணி எந்த அளவிற்கு ஒன்றிய அரசையும், பாரதீய ஜனதாக்கட்சியையும் பாதித்திருக்கிறது என்பதற்கு சரியான எடுத்துக்காட்டுத்தான் இந்தியாவிலிருந்து பாரதத்திற்கு தாவியதும், ஒரே நாடு - ஒரே தேர்தல் என்ற முழக்கமும் ஆகும்!! இது அரசியல் அச்சத்தின் வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை. கிராமங்களில் குழப்பவாதிகளை மந்தைகளிலும், சாவடிகளிலும் பார்க்கும் பொதுமக்கள், “இன்றைக்கு என்ன புதுக்குழப்பம்...”, என்று நையாண்டியாகக் கூறி நகைப்பார்கள். இன்று, பிரதமர் மோடிஜீ அவர்களும் புதுப்புதுக் குழப்பங்களை உருவாக்குகிறார். ஆம்! குழப்பங்களும் - குதர்க்கங்களும், நரித் தந்திரங்களும் தான் தங்களின் அரசியல் ஆயுதங்களா? தமிழ்நாட்டு மக்கள் 2024-ம் ஆண்டு நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் மோடியின் இந்த அரசியல் ஆயுதங்களை முனைமுறித்து தக்க விடையளிப்பார்கள்.

# நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பி.எல்.ஏ.2 கூட்டம்!



மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிவிப்பு!

நாள் :13 - 09 - 2023 -புதன்கிழமை

| ஒன்றிய/நகர/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| பள்ளிபாளையம் மத்திய ஒன்றியம், வடக்கு ஒன்றியம், படைவீடு பேரூர். | 9.00 AM | செல்லம்மாள் திருமண மண்டபம், இ.காட்டூர். |
| குமாரபாளையம் வடக்கு நகரம் , குமாரபாளையம் தெற்கு நகரம் | 10.00 AM | நகர கழக அலுவலகம், குமாரபாளையம். |
| பள்ளிபாளையம் நகரம் | 11.00 AM | நகர கழக அலுவலகம், பள்ளிபாளையம். |
| பள்ளிபாளையம் தெற்கு ஒன்றியம், ஆலாம்பாளையம் பேரூர். | 12.00 PM | ஈஸ்வரன் கோவில் மண்டபம், கொக்கராயன்பேட்டை. |
| மோகனூர் மேற்கு ஒன்றியம் | 4.00 PM | புகழி திருமண மண்டபம், பாலப்பட்டி. |
| பரமத்தி பேரூர், வேலூர் பேரூர், வெங்கரை பேரூர், பொத்தனூர் பேரூர், பாண்டமங்கலம் பேரூர், | 5.00 PM | சமுதாய கூடம், பரமத்தி. |
| பரமத்தி ஒன்றியம் | 6.00 PM | சமுதாயக்கூடம், ஆவாரங்காட்டு மேடு, மேல்சாத்தம்புதூர். |

நாள் : 14.09.2023 (வியாழக்கிழமை)

| ஒன்றிய/நகர/பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|
| மல்லசமுத்திரம் ஒன்றியம், மல்லசமுத்திரம் பேரூர் | 9.00 AM | சந்தை பாவடி திருமண மண்டபம், மல்லசமுத்திரம். |
| எலச்சிபாளையம் மேற்கு ஒன்றியம் | 10.00 AM | முத்துமஹால் மண்டபம், குமரமங்கலம். |
| திருச்செங்கோடு ஒன்றியம் | 11.00 AM | மாவட்ட கழக அலுவலகம், தளபதியார் அரங்கம், திருச்செங்கோடு. |
| திருச்செங்கோடு நகரம் | 12.00 AM | நகர கழக அலுவலகம், திருச்செங்கோடு. |
| எலச்சிபாளையம் கிழக்கு ஒன்றியம் | 4.00 PM | ரஞ்சனாஸ் மஹால், பெரியமணலி. |
| கபிலர்மலை ஒன்றியம் | 5.00 PM | சோழிய வேளாளர் திருமண மண்டபம், கபிலர்மலை. |

**எஸ்.எம்.மதுரா செந்தில்**
செயலாளர் - நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க.



அரியலூர் மாவட்டம், வாரணவாசி கிராமத்தில் உள்ள புதை உயிரிப்படிவ அருங்காட்சியகத்தினை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா மற்றும் பலர் உள்ளனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமக்கல் தெற்கு நகர செயல்வீரர் கூட்டம் நாமக்கல்லில் நடைபெற்றது. கூட்டத்தில் வருகிற டிசம்பர் மாதம் சேலத்தில் நடைபெறும் மாநில இளைஞர் அணி மாநாட்டு நிதியாக தெற்கு நகர கழகம் சார்பில் ரூ.1 லட்சம் நிதியை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமாரிடம் நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆர்.ஆனந்த் வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் சி.மணிமாறன், நாமக்கல் நகர் மன்ற தலைவர் து.கலாநிதி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் மற்றும் மாவட்ட, நகர கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.









தியாகி இமானுவேல் சேகரனாரின் நினைவு நாளையொட்டி நேற்று முன்தினம் பரமக்குடியிலுள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த வருகை தந்த கழக இளைஞர் அணிச் செயலாளரும் – அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட எல்லைகளில் மக்கள் திரண்டு உற்சாக வரவேற்பளித்த காட்சி!




தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா -
தி.மு.க. பவள விழா ஆண்டு

கலைஞர் 100 1924 - 2023

# தி.மு.க. முப்பெரும் விழா 2023

நாள் : 17-09-2023 மாலை 5.00 மணி.
இடம் : பள்ளிகொண்டா. வேலூர்

வரவேற்புரை :
**ஏ.பி. நந்தகுமார்,** எம்.எல்.ஏ.,
செயலாளர், வேலூர் மாவட்ட தி.மு.க.

தலைமை :
பொதுச்செயலாளர் **துரைமுருகன்**

**முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை பரிசு வழங்கும் விழா**
**“கழக விருது”க்காக** தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில்
ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று
- பணமுடிப்பு வழங்குதல்

விருது - பரிசுகள் வழங்கிச் சிறப்புரை :
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
தலைவர் **மு.க.ஸ்டாலின்**

: வாழ்த்துரை :
பொருளாளர் **டி.ஆர். பாலு**
முதன்மைச் செயலாளர் **கே.என்.நேரு**
துணைப் பொதுச்செயலாளர்கள் முனைவர் **க.பொன்முடி**
**ஆ.இராசா**
**கனிமொழி கருணாநிதி**
அந்தியூர் **ப.செல்வராஜ்**

நன்றியுரை :
**ப.கார்த்திகேயன்,** எம்.எல்.ஏ.,
செயலாளர், வேலூர் மாநகர தி.மு.க.



**பெரியார் விருது**
திரு. கி.சத்தியசீலன்



**அண்ணா விருது**
திரு. க.சுந்தரம்



**கலைஞர் விருது**
மாண்புமிகு ஐ. பெரியசாமி



**பாவேந்தர் விருது**
திருமதி மலிகா கதிரவன்



**பேராசிரியர் விருது**
திரு.ந.இராமசாமி

**தி.மு.க. தலைமைக் கழகம்**

# திராவிடப் போராளிகள் 34

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

■ வழக்கறிஞர் அருள்மொழி

## சனாதனத்தை அசைத்த சமூக மருத்துவர்!




“சங்கீதம், மனத்தை, உன்னத ஒழுக்க நிலைக்கு உயர்த்தும்; மிகத் தாழ்ந்த கேவலப் படுகுழியில் தள்ளவும் தள்ளும். ஆகையால், நாம், அதிலும் முக்கியமாக நமது வாலிப ஸ்திரீபுருஷர்கள் தங்கள் சகவாச விஷயத்தில் ஜாக்கிரதை எடுத்துக் கொள்ளவேண்டும். சங்கீதத்தில் நல்லதுமுண்டு; கெட்டதுமுண்டு. நற்குணமும் தூய்மையும் படைத்த மனிதர்கள், ஆன்மப் பரவசத்துடன் பாடும் சங்கீதமுண்டு. மோகமும் அழுக்கும் நிறைந்த பக்தியில்லாத மனிதர்கள் வெறிகொண்டு பாடும் சங்கீதமுமுண்டு.

ஆகையால், பகுத்தறிவுடன் பாடகரைப் பிடிக்கவேண்டும். பகிரங்க இடங்களில் பாடவும், ஆடவும் சங்கீத வித்வான்களையும், நாட்டியக்காரர் களையும் அழைக்கும்போது நமது தலைவர்கள் ஒரு விஷயத்தைக் கவனிக்க வேண்டும். நமது சமூகம் கருத்திலும், செயலிலும் உன்னத நிலைமையை அடைய வேண்டுமென்பதே தலைவர்களின் விருப்பம். ஆகையால், நல்ல சங்கீதத் திறமை மாத்திரமன்றி, சிறந்த ஒழுக்கமுடையவர்களையே, பொதுக் கச்சேரிக்கு அழைக்க வேண்டும். ஏனெனில் அவை உலகுக்கு ஓர் உதாரணமாய்ப் பயன்பட வேண்டும்“.

இப்படி ஒரு கட்டுரை, கலைகளை விரும்பும் உள்ளங்கள் ஒழுக்கத்தையும் வளர்க்க வேண்டும் என்றும் கலைஞர்களுக்குப் பகுத்தறிவு வேண்டும் என்றும் 1935-ஆம் ஆண்டு மே 1-ஆம் நாள் **‘பகுத்தறிவு’ இதழ் 2-இல்** வெளியானது.

இதனை எழுதியவர் கலை விமர்சகரல்ல. மருத்துவக் கல்லூரியில் முறையாக மருத்துவப் பட்டம் பெற்ற டாக்டர் முத்துலட்சுமி அவர்கள்தான் இதனை எழுதினார். அதுமட்டுமன்றி, கலைகளின் பெயரால் பெண்கள் எத்தகைய சீர்கேடான வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்று அவர் விவரித்திருந்தார்.

அதேபோல் **‘குடிஅரசு’** ஏட்டிலும், **‘ரிவோல்ட்’** (REVOLT) ஆங்கில இதழிலும் அவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன. தந்தை பெரியார், டாக்டர் முத்துலட்சுமி அவர்களின் கடிதங்கள் மற்றும் கட்டுரையைக் குறிப்பிட்டு **‘நீதிக்கட்சி’** ஆட்சிக்குப் பலமுறை கண்டனம் தெரிவித்துள்ளார்.

### தேவதாசி முறையை ஒழித்தவர்

சுயமரியாதை இயக்கத்தில் நேரடியாக ஈடுபடாத பல பெண்கள் தங்கள் மொழி, இன, சமத்துவக் கொள்கைகளாலும், பெண் விடுதலைக்கான போராட்டங்களாலும் திராவிட இயக்கத்தின் போராட்டங்களுக்கு வலு சேர்த்திருக்கிறார்கள். அதேபோல் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், சாதி, மதம் மற்றும் ஆண் ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடும் பெண்களுக்கு திராவிட இயக்கம் துணைநின்றதும் வரலாறுதான். ஏனெனில், எந்தக் கொம்பைக் கொண்டு அடித்தாலும் அடிபட்டது, படவேண்டியது **‘சனாதனப் பாம்பு’** என்பதுதான் அவர்களுக் கிடையில் இருந்த புரிதல்.

படிப்பவர் மனதைப் பதை பதைக்கச் செய்யும் பல உண்மைகள் மறைந்து கிடந்த தேவதாசிகளின் வாழ்க்கையை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தவர்கள் இருவர்.

மூவலூர் இராமாமிர்தம் என்ற போராளி ஏழ்மைமிக்கக் குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்தபோதும், தனக்கு வசதியும் வளமும் கொட்டித் தருவதற்குத் தயாராக இருந்த தேவதாசி முறையை எதிர்த்துப் போராடினார். அந்த மாயவலையில் மாட்டிக்கொண்ட பெண்களை, இழிவான வாழ்வில் ஈடுபடக் கூடாதென்று சொல்லி, அவர்களுக்குத் திருமண வாழ்வினை அமைத்துக் கொடுப்பதற்காகப் போராடினார் என்றால், அதே தேவதாசிக் குடும்பத்தில் பிறந்த, ஓரளவு வசதியான குடும்பப் பின்னணியில் வளர்ந்த டாக்டர் முத்துலட்சுமியோ சென்னை சட்டமன்றத்தில் பத்தாண்டுகளுக்கு மேல் போராடி, தேவதாசி முறையை ஒழிக்கச் சட்டத்தை நிறைவேற்றி வரலாறு படைத்தார். அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்காக அவர் நடத்திய தொடர் போராட்டத்தை, சென்னை மாகாணமே வியப்பாகப் பார்த்தது.

### போலி மதசம்பிரதாயங்களுக்கு பலி!

கோயில்களில் பெண்களுக்குப் பொட்டுக் கட்டி தேவதாசியாக வாழவைக்கும் கொடுமையைத் தடுப்பதற்காகவும் அப்பெண்களை மீட்டு, அவர்களுக்கு மறுவாழ்வு கொடுப்பதற்காகவும் மேலும் புதிய தேவதாசிகள் இந்து மதத்தின் பெயரால் கோயில் வழக்கம் என்ற பெயரால் அந்த அழிவுப் பாதையில் நுழைக்கப்படக்கூடாது என்பதற்காகவும் அவர் நடத்திய போராட்டம் மிகப்பெரிய சாதனையானது.

எத்தனை வகை எதிரிகள்? ஸநாதனிகள், வைதீகர்கள், தேசபக்தர்கள், பெரும் பணக்காரர்கள்... ஆனால், அவர்கள் அனைவரையும்விடக் கொடிய எதிரிகளாகச் செயல்பட்டவர்கள், செல்வாக்குப் பெற்ற தேவதாசிகளாக வாழ்ந்து கொண்டிருந்த பெண்கள். அவர்கள் எழுப்பிய வாதங்களோ பரபரப்பானவை. அதாவது ‘விபச்சாரம் வேறு நாடுகளில் இல்லையா?’ என்பதே அவர்களது முதல் கேள்வி.

அதற்கு டாக்டர் முத்துலட்சுமி “மேனாடுகளில் நாட்டிய மாதரும், நடிகைகளுமிருப்பது வாஸ்தவம். ஆனால், அவர்களது ஐதீகங்களுக்கும், தென்னிந்திய தேவதாசி வழக்கத்துக்கும் வித்தியாசமுண்டென்பதை நாம் யாவரும் அறிவோம். தென்னிந்திய தேவதாசிகள், போலி மதச் சம்பிரதாயம் ஒன்றுக்குப் பலியாகியிருப்பவர்கள்” என்று பதில் கூறினார்.

### சமூகநலத்துக்கான சட்டங்கள்

இத்தனை எதிர்ப்புகளையும் மீறி கோயில்களில் பெண்களைப் பொட்டுக்கட்டி தேவதாசி ஆக்குவதைத் தடை செய்ய அவருக்கு மிகுந்த ஆதரவளித்தவர் தந்தை பெரியார். அவருக்கு ஆதரவாகப் பேசியும் எழுதியும் துணை நின்றது சுயமரியாதை இயக்கம். அதனால்தான் , தேசிய இயக்கமாகிய காங்கிரசு இயக்கத்தில் காந்தியாரின் தலைமையில் பெரு மதிப்பு கொண்டவராக விளங்கிய டாக்டர் முத்துலட்சுமி அவர்கள் தனது முயற்சி வெற்றி பெறுவதற்கான சூழ்நிலையைப் பற்றி எழுதும்போது,

“என்னுடைய மசோதாவிற்குச் சட்டசபைகளில் ஒவ்வொரு முறையும் எவ்வளவு ஆதரவிருந்தது என்று உணர்ந்த சர்க்கார் இனியேனும், இப்பொட்டுக்கட்டும் வழக்கத்தைக் கோயில் களினின்றும் அடியோடு தவிர்க்க முன் வருவார்களென்று நம்புகிறேன். தேசத்தில் சுயமரியாதை உணர்ச்சி ஏற்பட்டு வருகின்றது; பொது ஜனங்களின் பால் கல்வி அபிவிருத்தியடைந்து வருகின்றது; ஒடுக்கப்பட்டவர்களும் தாழ்த்தப்பட்டவர்களும் விழித்துக் கொண்டார்கள்; அரசாங்கத்திற்கு இந்த நிலைமையில், இதைப்பற்றிய சட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு யாதொரு தடையும் ஏற்படாதெனக் கூறுவேன்” என்று எழுதினார்.

மேலும் இந்தக் கொடுமையில் குழந்தைகள் மாட்டாமல் இருக்க வேண்டுமானால் ‘குழந்தைப் பாதுகாப்புச் சட்டம்’ வேண்டும் என்றும் வாதிட்டார்.

“மற்றைய தேசங்களில் அநுசரிக்கப்படுவது போன்றே, குழந்தைகளைப் பாதுகாப்பதைப் பற்றியும் சுவீகரிப்பதைப் பற்றியும் நமது தேசத்திலும் சட்டம் ஏற்படுதல் அத்தியாவசியம். நூற்றுக்கு நூறு வீதம் கற்றவர்களுக்கு இங்கிலாந்து, அமெரிக்கா, ஜெர்மனி முதலிய தேசங்களிலும், பிற்காலச் சமூகநலத்தை உத்தேசித்து, இவ்வகையான சட்டங்கள் தேவையாயிருக்கின்றன. நம் சந்ததி பிற்காலத்தில் தேச நலம், மனோ நலம், ஒழுக்க நலம் இவைகளைப் பெறுவதற்கு இத்தகைய சட்டங்கள் அவசியமாயிருக்கின்றன. சிறுவர் சிறுமிகள் பாதுகாப்பதற்கு, அரசாங்கக் காப்புச் சட்டங்கள் வேண்டும். இச்சங்கங்கள் தாம் சிறுவர் சிறுமிகளைப் பார்வையிட்டு வருதல் வேண்டும்” என்று 1929-இல், வெளியான **‘திராவிடன் அனுபந்தம்** : தமிழ் மாகாண சுயமரியாதை மாநாட்டு மலரில்’ பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அவரது வாதங்கள் இன்றைய போக்சோ சட்டத்தின் முன்னோடியாக இருப்பது வியப்பை அளிப்பதாக இருக்கிறது.**

அவரது வாதங்கள் இன்றைய போக்சோ சட்டத்தின் முன்னோடியாக இருப்பது வியப்பை அளிப்பதாக இருக்கிறது.

டாக்டர் முத்துலட்சுமியின் பின்னணி என்ன? அவர் ஏன் தேவதாசி முறை ஒழிப்பில் முனைந்து நின்றார்?

(வருவார்கள்...)

## நூற்றாண்டைப் போற்றும் எழுத்துகள்!




கலைஞர் நூற்றாண்டில் அவருக்கு சிறப்பு சேர்க்கும் விதமாக, சொல்லப்படாத பல தகவல்களுடன் சிறப்பிதழைக் கொண்டு வந்துள்ளது ‘அந்திமழை’ இதழ். ஆசிரியர் கி.வீரமணி, பேராசிரியர் சுப.வீ, அமைச்சர் தங்கம் தென்னரசு, எழுத்தாளர் இமையம் உள்ளிட்ட முக்கிய ஆளுமைகள் முத்தமிழறிஞர் கலைஞருடனான தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

வாழ்க்கையில் குறிக்கோளுடன் வாழ்ந்த தலைவர் என, ஜப்பானிய மொழியில் உள்ள ‘இகிகை’ என்கிற பண்பாட்டு அடையாளத்துடன் கலைஞரை ஒப்பிடுகிறது ‘அந்திமழை’. நீண்ட ஆயுள்கொண்ட மனிதர்கள் ‘இகிகை’ கொண்டவர்களாம். கலைஞர் வாழ்ந்து மறைந்து இருக்கலாம். ஆனால், அவர் நினைவுகள் காலம் கடந்தும் நிற்கும் என்பதையே நூற்றாண்டு எழுத்துகள் உணர்த்துகின்றன.

## ஃப்ளாஷ்பேக்





## வாக்காள ‘பெரு’மக்கள்!


பொன்னுசாமி

நான் திருவாரூர் மாவட்டத்திலிருந்து நெய்வேலிக்கு இடம்பெயர்ந்தவன். இளம் வயதில் ஏற்பட்ட கழகப் பிணைப்பு தொடர்ந்தே வந்தது. அதன் காரணமாகவே என் குழந்தைகளை தலைவர் கலைஞரிடம் அழைத்துச் சென்று பெயர் வைக்க வேண்டும் என்று விருப்பப்பட்டேன்.



1988-இல் முதல் மகன் பிறந்தபோது பொதுக்கூட்ட மேடையில் அழகிரி என்று பெயர் வைத்தார். 1991-இல் இரண்டாவது மகனுக்கு கதிரவன் என்றும், 1993-இல் மகளுக்கு மலர்விழி என்றும் பெயர் வைத்தார். மகளுக்குப் பெயர்வைத்த மேடையில், “வாக்காளர் பட்டியலில் பெயர் அதிகமாகிவிட்டது. இத்தோடு நிறுத்தி கொள்ளவும்” என்றார் அவருக்கே உரிய நகைச்சுவையுடன். 58 வயதில் இதை எல்லாம் எண்ணி மகிழ்கிறேன்.

**-பொன்னுசாமி, கிளைச் செயலாளர், நெய்வேலி.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்க ளுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஒரே விதமான ஆணை

**1968-ஆம் ஆண்டு கலைஞரின் 45-வது பிறந்தநாள் விழாவில், பேரறிஞர் அண்ணா கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். அந்த உரை கலைஞர் குறித்து, வரலாற்றுச் சிறப்புமிக்க உரையாக அமைந்தது. “தண்டவாளத்தில் தலை வைத்துப் படு என்று சொன்னாலும், அமைச்சர் பதவியை ஏற்றுக் கொள் என்று கூறினாலும், இரண்டையும் சமமாகக் கருதி ஏற்றுக்கொண்டு, தன்னுடைய திறமையை ஊர் உலகத்துக்குப் பயன்படுத்தும் என் தம்பி” என்று அப்போது பெருமைபடுத்தினார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 239




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131